# The Morning Star

*A Christian Publication*

# உதயதாரகை

*Established 1841*

*Subscription Rs.100/= (postage Separate)*

*The Morning Star
CACM Head Office
Christian Theological Seminary
Maruthanarmadam
Chunnakam
Sri Lanka.*

***Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people.***

**Email: themorningstar1841@gmail.com - Vol. 184 - Jaffna - Friday, 27th June 2025 - No. 02 - Web: www.cacmchurch.com**


## நம்பிக்கையுடன் நல்ல விதைகளை நாட்டுவோம்

# 13வது பேரவை கூட்டத்தொடர்



அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் 13வது வருடாந்தப் பொதுப் பேரவைக் கூட்டமானது **“நம்பிக்கையுடன் நல்ல விதைகளை நாட்டுவோம்”** எனும் கருப்பொருளில் 2025 மே மாதம் 23ம் மற்றும் 24ம் திகதிகளில் மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி கேட்போர் கூடத்தில் திருச்சபைத் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

முதல் நாள் பேரவைக் கூட்டமானது காலை 9.45 மணியளவில் இறைவழிபாட்டுடன் ஆரம்பமானது. இவ் வழிபாட்டினை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் அதிபர் அருட்பணி. ஏ. கமலக்குமாரன் அவர்கள் தலைமையில் கிழக்கு மற்றும் வன்னிப் பிராந்திய அங்கத்தவர்கள் இணைந்து நடாத்தினார்கள். திருச்சபையின் தலைவர் அருட்பணி ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் யாத்திராகமம் 18ம் அதிகாரம் 12-27 வரையான திருமறைப் பகுதியை மையப்படுத்தி இறை செய்தியினைப் பகிர்ந்துகொண்டார்.

இக் கூட்டத் தொடருக்கான பதிவுச் செயலாளர்களாக திரு. கே. றெஜினோல்ட், அருட்பணி. சுதாசினி சுதாகரன் ஆகியோர் தெரிவு

(10ஆம் பக்கம் பார்க்க)

# “குயவன் கையில் களிமண்”

## வாலிபருக்கான நற்செய்திப் பாசறை – 2025




அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் வாலிபர் பணிக்குழுவின் ஏற்பாட்டில் மார்ச் மாதம் 28, 29, 30 ஆம் திகதிகளில் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள தூய அந்திரேயா ஆலயம், பெரிய நீலாவணைத் திருச்சபையில் **“குயவன் கையில் களிமண்”** என்ற தலைப்பில் வாலிபருக்கான நற்செய்தி பாசறை சிறப்புற நடைபெற்றது. இப் பாசறையில் ஆன்மீகம் தொடர்பான பல கருத்தமர்வுகள், பயிற்சி பட்டறைகள், மற்றும் தனிப்பட்ட தியானங்கள் உள்ளடங்கிய இறை விழுமியத்தின் அடிப்படையில் சிறப்புற நடைபெற்றது.

அனைத்துப் பிராந்தியங்கள் இணைந்து 68 வாலிபர்கள் உள்ளடங்கிய இவ் வாலிபர் பாசறையில் வளவாளர்களாக அருட்பணி. எம். ஜெயானந்தராசா, அருட்பணி. எஸ். ஜோன் புவியரசன், அருட்பணி. எஸ். சிவானந்தரூபன், திரு. ரஞ்சித் Ms. சந்திரிகா மற்றும் திரு. ஏ. தேவானந் அவர்களும் சிறப்புற வாலிபர்களை கற்கைநெறி வழியாக கொண்டு நடத்தியதோடு மேலும் விளையாட்டுகளுடன் இணைந்த ஐக்கியத்தின் வாயிலாக திரு. ஜே. கலிங்டஸ் அவர்களும் நிர்வாக ஒருங்கிணைப்பு வாயிலாக திரு. ஆர். சுஜந்தன் அவர்களும் நேர்த்தியாகப் பாசறையை பூரணப்படுத்தினர்.



மேலும் தவக்காலத்தையொட்டி ஆன்மீக கண்ணோட்டத்தில் நடைபெற்ற இப்பாசறையில் சுமார் 50 வீதமானோர் புதுமுக வாலிபர்களாக

(11ஆம் பக்கம் பார்க்க)

## வாலிபர்களுக்கான

# கருத்தரங்கு

மருதனார்மடம், கிறிஸ்தவ இறையியல் கல்லூரியும் ஆசியபெண்கள் கல்வி அமைப்பும் இணைந்து **“நம்பிக்கை, பால்நிலை, மற்றும் வன்முறையற்ற சூழல்”** எனும் கருப்பொருளில் வாலிபர்களுக்கான கருத்தரங்கு சிறப்பான முறையில் நடைபெற்றது. மேலும் இக்கருத்தரங்கானது 29, 30 மே 2025 ஆகிய தினங்களில் North Gate தங்குனர் விடுதியில் நடைபெற்றது. இதன்போது அனேக வாலிபர்கள் கலந்துகொண்டதோடு வளவாளர்களாக திருமதி.பிரியதர்சினி மற்றும் அருட்பணி. ஏ.கமலகுமாரன் ஆகியோர் இணைந்து இன்றைய

(11ஆம் பக்கம் பார்க்க)

# இறைபணியில் இணையும்

## புதிய அருட்பணியாளர்கள்

இறை ஊழியத்தில் வாஞ்சை கொண்டு 2021ஆம் ஆண்டு கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் இணைந்து கொண்டு தமது குருத்துவப் பயிற்சியை நிறைவுசெய்து பணிக்களங்களுக்கு



செல்ல தயார் நிலையில் உள்ள, சகோதரன். சி. அற்புதஜீவன், சகோதரன். யோ. டொரிங்டன் டானியல், சகோதரன். ச. ஏரோன் ஆகிய மூவரையும் நடைபெற்று முடிந்த அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் 13வது பேரவை கூட்டத்தில்

(11ஆம் பக்கம் பார்க்க)

# கொம்பாக்ஷன் இன்ரனசனல் லங்காவின்

## திருச்சபைத் தலைவர்களுடன் சந்திப்பு

கடந்த 27 மே 2025-இல் இலங்கையில் செயற்படும் திருச்சபையுடன் இணைந்து பணியாற்றும் கொம்பாஷன் இன்ரனசனல் லங்கா நிறுவனமானது ஒரு பயனுள்ள செயலமர்வு ஒன்றினை கொழும்பு 03இல் உள்ள “மண்டரீனா” ஹோட்டலில் நடத்தியது. இந்த செயலமர்வுக்கு



தம்முடன் இணைந்து பணியாற்றும் திருச்சபை தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை, அங்கிலிக்கன்

(04ஆம் பக்கம் பார்க்க)

*ஆசிரியர் பேனாமுனையில்...*

# பக்குவமாய்க் கடந்திட்ட பதினெட்டு வருடங்கள்

ஆண்டவர் எம்மை புதிய தரிசனத்தோடும், புதுப்பொலிவோடும் அழைத்துவந்த பதினெட்டு வருடங்களையும் திரும்பிப் பார்த்தால், அது எமக்குக் கற்றுத் தரும் வரலாற்றுப் பதிவுகள் தான் எத்தனை? துன்பங்களும் இன்பங்களும், துயரங்களும் களிப்புக்களும், வெற்றிகளும் சவால்களும் என நாம் கடந்து வந்த பாதைகளைத் திரும்பிப் பார்க்கும் போது கர்த்தருக்கு நன்றி சொல்ல வார்த்தைகள் இல்லை. இந்த வருடம் எமக்கு மகிழ்வின் வருடம். பல வருடங்கள் நாம் எதிர்பார்த்திருந்த முக்கிய காரியம் நடந்தேறிய வருடம். அதை எண்ணி மகிழ்வது எவ்வளவு ஒரு மகிழ்ச்சியான, தித்திப்பான விடயம். எமது சி.ஏ.சி.எம்மை ஆண்டவர் வழிநடாத்திய விதத்தை எண்ணி ஆண்டவருக்கு நன்றி செலுத்தக் கடைமைப் பட்டிருக்கிறோம்.

1 பேதுரு 2:9 கூறுகின்றது, *"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்."*

சி.ஏ.சி.எம் கடந்து வந்த பாதைகளைத் திரும்பிப் பார்க்கையில் தீக்கடலை இறைவன் துணையுடன் கடந்து வந்தவர்கள் நாம் எனப் பெருமையுடன் கூறலாம். செங்கடலைக் கடந்த அனுபவங்கள் பல எமக்கு ஏற்பட்டதுண்டு. கழுகைப் போல எமக்குப் புதுப் பெலன் தந்து இறைவன் எம்மை வழிநடாத்தி வருகின்றார்.

கழுகின் ஆயுள்நாட்கள் சுமார் 30 முதல் 40 ஆண்டுகள் என்று கூறப்படுகின்றது. இவ்வளவு நீண்ட நாட்கள் அது வாழ்வதற்கு ஒரு ரகசியத்தை அது அறிந்து வைத்துள்ளது. அதாவது பல ஆண்டுகள் வாழ்ந்தவுடன் அதற்கு முதுமை ஏற்படுகிறது. உடனடியாக அது மிகப்பெரிய கன்மலை உச்சியில் போய் அமர்ந்து, தன்னுடைய பழைய இறக்கைகளை பாறையின் மேல் அடித்து உதிர்த்து விட்டு, அந்த கன்மலையின் மேல் சில மாதங்கள் காத்திருக்கிறது. அப்பொழுது அதனுடைய தேவையற்ற கொழுப்புகள் கரைந்து போகிறது. அதே வேளையில் அதற்கு புதிய சிறகுகள் முளைத்து அது ஒரு இளம் கழுகாக மாறுகிறது. இப்போது அதற்கு ஒரு புதுபெலன் உண்டாகிறது, எனவே அது தன் செட்டைகளை அடித்து உயரே எழும்பிப் பறக்கிறது. அந்த கழுகு எங்கே காத்திருந்தது தெரியுமா? கன்மலையின் மேல் காத்திருந்தது.

எமது கன்மலையான இயேசுவுக்குள் நாம் பொறுமையாகக் காத்திருக்கும் போது எமக்குப் புதுப் பெலன் உண்டாகின்றது.

ஏசாயா 40:31 கூறுகின்றது *"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள் அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்"* கழுகுகளைப் போல உயரப் பறக்கவும், புதுப்பெலனுடன் பறக்கவும் பக்குவமாய்க் கடந்திட்ட பதினெட்டு வருடங்களில் காத்திட்ட இறைவன் தொடர்ந்தருள் புரிவாராக.

**ஏ.பி.ரி**

## அன்பின் வாசகர்களே!

கடந்த காலத்தில் தங்கள் ஆக்கங்களுக்கூடாகவும் செய்திகளுக்கூடாகவும் ஜெபங்களுக்கூடாகவும் நன்கொடைகளுக்கூடாகவும் உதவியமைக்கு நன்றிகள்.

தொடர்ந்தும் தங்கள் ஆக்கங்களையும் செய்திகளையும் உதயதாரகை இதழுக்கு தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் இத்திருப்பணியை உங்கள் ஜெபங்களுக்கூடாகவும் நன்கொடைகளுக்கூடாகவும் தாங்கும் படியும் அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு:**
The Editor, The Morning Star, Asia House,
Maruthanarmadam, Chunnakam. 0777 422 207.
E.mail : *themorningstar1841@gmail.com*

# அருட்பணி. ஈனோக் P. புனிதராஜா
## (1965 - 2020)

உடுவில் திருச்சபையினை தாய்த் திருச்சபையாகக் கொண்ட இவருடைய முழுப் பெயர் **ஈனோக் பூரணமகிபன் புனிதராஜா** என்பதாகும். இவர் 01.08.1965இல் சாவகச்சேரியைச் சேர்ந்த ஏர்வின் நல்லையா புனிதராஜா என்பவருக்கும் சங்குவேலியைச் சேர்ந்த கிறிஸ்டபெல் ஞானம்மா (nee தம்பு) என்பவருக்கும் மகனாகப் பிறந்தார். இவருக்கு இளையவர்களாக ஒரு சகோதரியும் ஒரு சகோதரனும் உள்ளனர். இவருடைய தாயார் தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாணப் பேராயத்தினுடைய முன்னாள் இறைபணியாளரான அருட்பணி. சாம் தம்பு அவருடைய சகோதரியாவார்.



இவர் உடுவில் திருச்சபையினை சேர்ந்தவரும், உடுவில் மகளிர் கல்லூரியின் ஆசிரியருமான செல்வி. இவாஞ்சலின் டிலுக்ஷினி ஸ்பென்சர் அவர்களைத் தனது வாழ்க்கைக்கும் இறைபணிக்கும் துணையாகத் தெரிந்து கொண்டார். இவருக்கு ரேச்சல் சூசன்னா, சன்றா ஜொகன்னா என்னும் இருபெண் பிள்ளைகள் உள்ளனர். போதகரம்மாவை எல்லோரும் டிலோப் போதகரம்மா என்று அன்பாக அழைப்பார்கள்.

இவர் தன்னுடைய ஆரம்பக் கல்வியினை வெள்ளவத்தையில் உள்ள ஒரு ஆரம்பப் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியினை கொழும்பு – 07இல் உள்ள D.S சேனநாயக்கா மகா வித்தியாலயத்திலும் (தற்போது D.S சேனநாயக்கா கல்லூரி) உயர்தரக் கல்வியினை கொழும்பு றோயல் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். 1983இல் இடம் பெற்ற ஜூலை இனக்கலவரம் காரணமாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இவர், யாழ் பரி. யோவான் கல்லூரியில் இணைந்து கொண்டு தன்னுடைய கல்விப் பொதுத் தாரதர உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் தோற்றி சித்தியடைந்தார்.

பாடசாலைக் கல்வியினை நிறைவு செய்த இவர், இந்தியாவின் தாம்பரம் நகரிலே அமைந்துள்ள "Madras Christian College" இல் கல்வி கற்று B.Com பட்டதாரியானார். இறைபணியில் வாஞ்சை கொண்ட இவர், இறையியலில் பயிலுவதற்காக மதுரை, அரசடியில் உள்ள "தமிழ்நாடு இறையியல் கல்லூரியிலே" (T.T.S.) 1991இல் இணைந்து கொண்டார். 1996இல் இறையியல் படிப்பினை B.D பட்டத்துடன் நிறைவு செய்த இவர், நாடு திரும்பித் தன்னுடைய இறைபணியினை 1996ஆம் ஆண்டு மே மாதம் மூளாய் திருச்சபையில் ஆரம்பித்தார். மூளாய், தொல்புரம் ஆகிய பகுதிகளில் 1966 முதல் 1997 வரையான காலப்பகுதியில் இவர் பணியாற்றும் போது 1995இல் இடம்பெயர்ந்த கிறிஸ்தவ இறையியல் கல்லூரியும் 1996இல் மீள வட்டுக்கோட்டையில் இயங்கிக் கொண்டிருந்தது. அவ்வேளையில் இவர் இவ்விறையியல் கல்லூரியின் பகுதிநேர விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

1997இல் கொழும்புத் திருச்சபையினுடைய உதவி ஊழியனாக மாற்றம் பெற்றுச் சென்ற இவர் 1997 – 1998 வரை கொழும்புத் திருச்சபையின் உதவி ஊழியனாகப் பணியாற்றினார். இக்காலப்பகுதியில் இவர் உதவிக்குருவாக அருட்பொழிவு பண்ணப்பட்டார்.

பின்னர் 1999இல் முதுஇறையியல்மாணிக் கற்கை நெறிக்காக (M.Th) மதுரையில் உள்ள தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் இணைந்து கொண்ட இவர், சமூக ஆய்வியல் துறையிலே (M.Th) பட்டத்தினைப் பெற்றுக் கொண்டதுடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே சமூகவியல் துறையிலே (M.A) பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார். 2001ஆம் ஆண்டு நாடு திரும்பிய இவரை யாழ்ப்பாணப் பேரயம் நிரந்தரமான விரிவுரையாளராக கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக்கு நியமித்தனர். அங்கு இருந்த இவர், கற்பித்தல் பணிகளுடன் சத்தியபுரம், உடுவில், இணுவில் எனும் திருச்சபைகளின் குருவாகவும் ஏழாலை தெற்கு, வடக்கு, எனும் திருச்சபைகளின் சேகரக் குருவாகவும் பணியாற்றினார். இக்காலப் பகுதியில் 09.03.2002இல் வட்டுக்கோட்டை பேராலயத்தில் இவர் குருவாக அருட்பொழிவு பெற்றார்.

2009இல் நுவரெலியாவில் உள்ள உடப்புசலாவைத் திருச்சபைக்கு மாற்றம் பெற்றுச் சென்ற இவர் 2012 – 2016 வரை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவராகப் பணியாற்றினார். அதன் பின்னர் சில மாதங்கள் காரைநகர் திருச்சபையின் பணிகளைக் கவனித்து வந்த இவர் 2018 மே மாதத்தில் நடைபெற்ற ஊழியர் பொது இடமாற்றத்தின் போது மறுபடியும் சத்தியபுரம் திருச்சபைக்கு இடம் மாற்றப்பட்டார். இங்கு இவர் பணியாற்றிகொண்டிருந்தபோது 08.05.2020ஆம் திகதி அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னாரின் பூதவுடல் சத்தியபுரம் திருச்சபையில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு, உடுவில் திருச்சபையில் நல்லடக்க வழிபாடு நடைபெற்று, உடுவில் திருச்சபை கல்லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# மாநாட்டு மண்டபம் மீள்பிரதிஷ்டை

கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் பிரதான மாநாட்டு மண்டபத்தை பெருப்பிக்கும் வகையில் அதற்கான கட்டட வேலைகள் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது இந்த மண்டபத்தின் விஸ்தரிப்பு பணிகள் நிறைவுற்ற நிலையில் 2025 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி காலையில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் பதின்மூன்றாவது



பேரவை கூட்டம் ஆரம்பிக்கப்பட முன்னதாக இக் கட்டத்திற்கான திறப்பு விழா நிகழ்வானது அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சி.ஏ.சி.எம். திருச்சபையின் செயலாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் அவர்கள் ஆரம்ப இறைவேண்டலினை எறெடுத்தார். நினைவுக் கல்லினை சி.ஏ.சி.எம். திருச்சபையின் உப தலைவர் திரு. ஐ. அருள்றொகான், கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் அதிபர், அருட்பணி. அ. கமலக்குமாரன் ஆகிய இருவரும் இணைந்து திரைநீக்கம் செய்தனர். இதனைத் தொடர்ந்து சி.ஏ.சி.எம். திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் மற்றும் திருச்சபையின் பொருளாளர், திரு. என்.




கே. ரமேஸ்குமார் ஆகிய இருவரும் இணைந்து இந்தக் கட்டத்தை நாடாவெட்டி திறந்து வைத்தனர். இந்த நிகழ்வில் சி.எ.சி.எம் திருச்சபையின் குருமார்களும், சபைப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இந்த மண்டபத்தின் விஸ்தரிப்பு பணிகளிற்கான நிதி பங்களிப்பை யாழ்ப்பாண கல்லூரி நம்பிக்கை நிதியம் (JCTF) வழங்கியிருந்தது.

## போட்டி இல. 003 கான விடைகள்

1. கபிரியேல்
2. அயின்காரிம்
3. இயேசு மரியாள்
4. ஆண்டவரின் கொடை
5. தாவீது
6. மேற்கூறிய அனைத்தும் சரி
7. காய்பா
8. திருமுழுக்கு யோவான்
9. தாழ்மை
10. கற்களை அப்பமாக்கும்படி
11. மகதேலேனா மரியாள், யோவன்னா, யாக்கோபின் தாய் மரியாள்
12. மேற்கூறிய மூன்றும் வேண்டும்

### பங்குபற்றியவர்கள்

செல்வன். ர. கஜீகரன்
செல்வன். சாம் ஆதவன்
செல்வி. ம. சுதர்சினி
செல்வன். யூ. அபிசாய்
செல்வன். யூ. ஐக்சன்
செல்வி. ஆகாசியா நரேஸ்நிக்ஸன்
செல்வி. ஜசில்டா யேசுராசா
திருமதி. சாள்ஸ் கயல்விழி
செல்வி. யூ. லிதிஷா
செல்வி. ஏ. ஜன்சா






**குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டவர்**
செல்வி. ஆகாசியா நரேஸ்நிக்ஸன்

# வினாடிக்கு வினா
## போட்டி இல. 004

01) சோதனையிலிருந்து விடுபடுவதற்கு இயேசு ........... பயன்படுத்தினார்?
1. திருக்குரான் 2. திருவிவிலியம்
3. திரிபிடகம் 4. திருக்குறள்.

02) இயேசு நாசரேத்தூரின் செபக்கூடத்தில் தனது கொள்கைகளை விளக்குவதற்குப் பயன்படுத்திய ஏட்டுச் சுருள்?
1. லூக்கா 2. திருப்பாடல் 3. ஏசாயா 4. அரசர்

03) பன்னிரண்டு சீடர்களுக்கு வழங்கப்பட்ட விசேட பெயர்?
1. தெரிந்துகொள்ளப்பட்டவர் 2. அழைக்கப்பட்டவர்
3. மீட்கப்பட்டவர் 4. அப்போஸ்தலர்

04) "அறுப்பு மிகுதி வேலையாட்களோ குறைவு" எனக் கூறி இயேசு அனுப்பிய சீடர்களின் தொகை?
1. 12 2. 70 3. 120 4. 03

05) "ஏழைகளே நீங்கள் பேறு பெற்றோர்" ஏனெனில் ..............?
1. பட்டினியாக இருப்பீர்கள்
2. நீங்கள் நிறைவு பெறுவீர்கள்
3. நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள்
4. இறையாட்சி உங்களுக்கு உரியதே

06) இயேசுவின் போதனையின் மையம்?
1. இலங்கை அரசு 2. யூத அரசு
3. இறையரசு 4. இஸ்ராயேல் அரசு

07) இயேசு சீடர்களிடம் நீங்கள் என்னை யாரென்று நினைக்கிறீர்கள் என்ற வினாவிற்கு பேதுருவின் பதில்?
1. எலியா 2. நீர் கடவுளின் மெசியா
3. திருமுழுக்கு யோவான் 4. இறைவாக்கினன்

08) இயேசுவின் பாதத்தடியிலிருந்து போதனையைக் கேட்டு நல்ல பங்கைத் தேர்ந்துகொண்ட பெண்?
1. மரியாள் 2. மார்த்தாள் 3. சூசன்னா 4. யோவன்னா

09) யூத ஆண்பிள்ளைகள் "தோராவை" கற்பதற்குச் செல்லும் வயது?
1. 10 2. 11 3. 12 4. 14

10) குள்ளமானவர், செல்வந்தர், வரி அறவிடுபவர்களின் தலைவன் மேற் கூறிய கூற்றுக்களுடன் தொடர்புடைய நபர்?
1. வேலி 2. சகேயு 3. அனனியா 4. யூதாஸ்

11) இயேசு கெத்சமனே தோட்டத்தில் சீடர்களுக்குக் கூறியது?
1. நித்திரை கொள்ளுங்கள்.
2. வாள்களை தயாராக வைத்திருங்கள்.
3. நீங்கள் சோதனைக்குட்படாத படி செபம் பண்ணுங்கள்.
4. நித்திரை கொள்ளாது பாருங்கள்.

12) இயேசு கைது செய்யப்பட்ட பொழுது மனங்கசந்து அழுத சீடன். ?
1. யாக்கோபு 2. யோவான்
3. யூதாஸ் காரியோத் 4. பேதுரு.

மேற்காணும் போட்டிக்கான பதில்களை ஒவ்வொருவரும் தனித்தனியாக எழுதி அனுப்புங்கள். சரியான பதிலை அனுப்பி வைக்கும் போட்டியாளர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசில் வழங்கப்படும். மற்றய வெற்றியாளர்களின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சரியான பதில்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

மேலும் ஒரே பிரதி மீண்டும் மீண்டும் வேறு நபர்கள் அனுப்பும் பட்சத்தில் முதல் அனுப்புவரின் பதில் மட்டுமே போட்டியில் இணைத்துகொள்ளப்படுவதுடன் மற்றவர்கள் போட்டியிலிருந்து நீக்கப்படுவார்கள் என்பதை அறியத்தருகின்றோம்.

# குறுக்கெழுத்துப் போட்டி

## போட்டி இல 004

| | | | | |
|---|---|---|---|---|
| 01 ப | | 02 | 03 | |
| | ■ | | | ■ |
| 04 ப | | | | 05 |
| | ■ | | | |
| 06 | | | ■ | |

### இடமிருந்து வலம்

01. விண்ணுலகு
04. உதயதாரகை ஒரு
05. கரம்
06. நாள் (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. சிறுவர்கள் விளையாடுவது
02. உலகத்தை ஆள்பவன்
03. வெட்டு (குழப்பியுள்ளது)
04. இகம் எதிர்ச்சொல்
05. பிரதியுபகாரம்

மேற்காணும் போட்டிக்கான பதில்களை ஒவ்வொருவரும் தனித்தனியாக எழுதி அனுப்புங்கள். சரியான பதிலை அனுப்பி வைக்கும் போட்டியாளர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசில் வழங்கப்படும். மற்றய வெற்றியாளர்களின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சரியான பதில்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

மேலும் ஒரே பிரதி மீண்டும் மீண்டும் வேறு நபர்கள் அனுப்பும் பட்சத்தில் முதல் அனுப்புவரின் பதில் மட்டுமே போட்டியில் இணைத்துகொள்ளப்படுவதுடன் மற்றவர்கள் போட்டியிலிருந்து நீக்கப்படுவர்கள் என்பதை அறியத்தருகின்றோம்.

**அனுப்ப வேண்டிய முகவரி**

உதயதாரகை
ஆசியா இல்லம்,
மருதனார்மடம், சுன்னாகம்

**மின்னஞ்சல் முகவரி**

*themorningstar1841@gmail.com*

**Whatsapp**

0773 627 537

**இறுதித் திகதி 01-08-2025**

## கொம்பாஷன் இன்ரனசனல்

(01ஆம் பக்க தொடர்ச்சி)

திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை தலைவர்களுடன் பிராந்திய தலைவர்களும் பிரதிநிதிகளும் சுயாதீன சபை தலைவர்களும் கலந்து கொண்டனர்.

2025 ஆம் வருடத்திலும் எதிர்வரும் காலங்களிலும் எவ்வாறு தேவையுள்ள மக்கள் மத்தியில் சென்று செயலாற்றுவது என்பது குறித்த கருத்துக்களைக் கேட்டறிந்து கொண்ட நிர்வாகம் அது குறித்து திட்டமிடல்களையும் இணைந்து மேற்கொண்டிருந்தனர். இந்த செயலமர்வில் இலக்கைகான தேசிய இயக்குனர் திரு. ஷவின் பெர்ணாண்டோ, சிரேஸ்ட பங்காளித்துவ முகாமையாளர் திரு. ஏ. அஜித்குமார், வடக்கு கிழக்கு பங்காளித்துவ முகாமையாளர் திரு. ஆர். கஜாந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும் இந்நிகழ்வில் எமது திருச்சபையின் சார்பில் திருச்சபைத் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் மற்றும் சவைத் திருப்பணி மன்றின் இயக்குநர் திரு. பிரிவீன் ஜோசேப் ஆகியோர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## போட்டி இல 003கான சரியான பதில்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 வ | ணா | 02 ந் | 03 த | ர | 04 ம் |
| ல | ■ | 05 த | ரி | ■ | ந |
| க் | 06 லை | ல் | த் | 07 ம | ■ |
| 08 க | டு | க | தி | சே | 09 வை |
| 10 ர | 11 த | ■ | 12 ர | ம் | 13 க |
| 14 ம் | வி | ப | ம் | ■ | றை |

### பங்குபற்றியவர்கள்

செல்வன். ர. கஜீகரன்
செல்வன். சாம் ஆதவன்
செல்வி. ம. சுதர்சினி
செல்வன். யூ. அபிசாய்
செல்வன். யூ. ஜக்சன்
செல்வி. ஆகாசியா நரேஸ்நிக்ஸன்
செல்வி. ஜசில்டா யேசுராசா
திருமதி. சாள்ஸ் கயல்விழி






**குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டவர்**
செல்வன். ர. கஜீகரன்

# PUBLIC NOTICE

## The American Ceylon Mission

## Official Statement to the Public

This is to notify all concerned parties that all movable and immovable properties, including all Bank Accounts (Savings, Current, Fixed Deposits and Other Types of Deposits) that were Purchased, Registered, Deposited or Opened under the name of "American Ceylon Mission," "The American Ceylon Mission" (as per the American Ceylon Mission Ordinance No. 4 of 1908 by the Parliament of Sri Lanka) or any variation thereof or in combination with other names used by the Officers of the American Ceylon Mission since 1816 and those Officers who were duly appointed by the "American Board of Commissioners for Foreign Missions" ( ABCFM ) since the ordinance in 1908 and by the successor body of the ABCFM, the "United Church Board for World Ministries" ( UCBWM ) and the Board of the current Successor, the Wider Church Ministries ( WCM ) of the United Church of Christ, solely belong to the American Ceylon Mission. No individual or entity is authorized to claim ownership of these assets or assume control over these properties and all Bank Accounts.

The following officers, duly appointed by the Wider Church Ministries (WCM) are the current and the legal representatives of the American Ceylon Mission and are entrusted with the responsibility to Manage, Operate, and Safeguard these Assets:
Rev. Arulanantham Samuel Thevagunananthan - President
Mr. Navanesarajah Kingsley Rameshkumar - Treasurer
Rev. Ambalavanar Buvanasundararajah Thevathas - Secretary

Should you require any clarifications or have inquiries, kindly direct your correspondence by writing to: The Treasurer
The American Ceylon Mission
Asia House
Maruthanarmadam, Chunnakam
Sri Lanka.

**Rev. A.S. Thevagunananthan** President | **Mr. N.K. Rameshkumar** Treasurer | **Rev. A.B. Thevathas** Secretary

## சேவைத் திருப்பணி மன்றம் சார்ந்த கூட்டங்கள்

சேவைத்திருப்பணி மன்றின் கிழக்குப் பிராந்திய முன்பள்ளி ஆசிரியர்கள், இல்லக் காப்பாளர்கள் முகாமையாளர்கள், பிராந்திய உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் சேவைத் திருப்பணி மன்றின் இயக்குநர் திரு. பிரிவீன் ஜோசேப் அவர்களின் தலைமையில் 14.06.2025 சனிக்கிழமை காலை 10:00 மணியளவில் மட்டக்களப்பு புனித யோவான் பெண்கள் இல்ல மண்டபத்தில் அருட்பணி. எஸ். செல்வகுமார் போதகரின் ஜெபத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து கிழக்குப் பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. வை. நிவில் ரூபராஜ் அவர்கள் கூட்டம் தொடர்பான விளக்கத்தையும் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன், திருச்சபையின் உபதலைவர் திரு. ஐ. அருள்றொகான், சேவைத்திருப்பணி மன்ற பணிப்பாளர் திரு. பிரிவீன் ஜோசேப் மற்றும் சேவைத்திருப்பணி மன்றின் நிலைய இணைப்பு உத்தியோகத்தர் (இணைப்பாளர்) திரு. த. யூதராஜா அவர்களையும் அறிமுகம் செய்து தலைமையுரையினை வழங்கியதுடன் வருகைகந்த அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்றார்.



அடுத்து திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் போதகர் அவர்கள் காலைத் தியானத்தில் வழிநடாத்தினார், இத்தியானத்திற்கு ஆதாரமாக மாற்கு நற்செய்தியல் கூறப்பட்ட ஐந்து அப்பமும் இரண்டு மீன்களையும் குறித்தான பகுதியல் காணப்படும் பகிர்வினை மையப்பொருளாக்கி நகர்த்திச் சென்றார்.

தியானம் நிறைவடைந்ததும் தொடந்தும் பாலர் பாடசாலைகள் சுயமாக நிலைத்திருக்க வேண்டியதன் அவசியம் அல்லது எப்படி நிலைத்ருத்தல் தொடர்பான கருத்தமர்வினை தலைவர் அவர்கள் தலைமை தாங்கி வழிநடாத்தினார். முகாமையாளர்கள் ஆசிரியர்கள், இல்லப் பாதுகாவலர்கள் உற்சாகத்துடன் இச்செயலமர்வில் பங்கேற்றனர்.

தொடர்ந்து சேவைத் திருப்பணி மன்றின் இயக்குநர் திரு. பிரிவீன் ஜோசேப் அவர்கள் சேவைத் திருப்பணி மன்றின் கட்டமைப்பு தொடர்பான கலந்துரையாடலினை முன்னெடுத்தார், அதில் புதிதாக நடைமுறைப்படுத்தியுள்ள/ இலகுவாக்கப்பட்டுள்ள கட்டமைப்பினை விளங்கப்படுத்தினார். அனைவரும் ஆர்வத்துடன் செவிமடுத்தனர்.

தொடர்ந்து சேவைத்திருப்பணி மன்றின் நிலைய இணைப்பு உத்தியோகத்தர் (இணைப்பாளர்) திரு. த. யூதராஜா அவர்கள் முன்பள்ளிகளின் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடியதுடன் எமது முன்பள்ளிகளை நாங்களே நடாத்துவதற்கு உள்ளூர் வளங்கள் மற்றும் பெற்றோர் பங்களிப்பு ஆகியவற்றை முழுமையாகவும் சீராகவும் பெற்று முன்பள்ளிகளை சிறப்பாக நடாத்துவதற்கான முன்னெடுப்புக்களுக்காக நாம் அனைவரும் உழைக்கவேண்டும் என்ற அழைப்பையும் விடுத்தார்.

இக்கூட்டத்திற்கு முன் பள்ளி ஆசிரியர்கள், சிறுவர் இல்ல பாதுகாவலர்கள், முகாமையாளர்கள், பிராந்திய குரு, பிராந்திய பொருளாளர், திருச்சபையின் தலைவர், திருச்சபையின் உப தலைவர், சேவைத்திருப்பணி மன்ற இயக்குநர் மற்றும் சேவைத்திருப்பணி மன்ற நிலைய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் (இணைப்பாளர்)

(11ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை

# பண்டத்தரிப்பு

1656ஆம் ஆண்டு இலங்கையைக் கைப் பற்றிய ஒல்லாந்தர் தாங்கள் அனுசரித்த சமயமாகிய புரட்டஸ்தாந்து சமயத்தினைப் பரப்பும் போது இவ்வாலயத்தினையும் புரட்டஸ்தாந்து வழிபாட்டிற்காகப் பாவிக்கத் தொடங்கினார்கள். இவர்கள் 1796 வரை 152 ஆண்டுகள் இவ்வாலயத்தினைப் பாவித்து வந்ததுடன் பண்டத்தரிப்புப் பகுதியிலே ஒரு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ சமூகத்தையும் உருவாக்கியிருந்தார்கள். 1796ஆம் ஆண்டு இலங்கையில் ஆங்கிலேயருடைய ஆட்சி உதயமானது. ஆங்கிலேயர் ஆட்சியைக் கைப்பற்றியதும் அவர்கள் சமய சுதந்திரத்தை அறிவித்தார்கள்.



அமெரிக்கன் மிசன் சங்கத்தால் யாழ்ப் பாணத்துக்கு அனுப்பப்பட்ட 2ஆம் கட்ட மிசன் தொண்டர் அணியில் 4 மிசன் தொண்டர் குடும்பங்கள் அடங்கியிருந்தனர். இவர்கள் அனைவரும் மிகச் சிறந்த கல்விமான்கள் அவர்களில் வைத்திய கலாநிதி ஜோன் ஸ்கடர் அவர்களும் அவர் மனைவியும் பண்டத்தரிப்பு ஆலயத்தை 1820ஆம் ஆண்டில் பொறுப்பேற்றனர். அமெரிக்கன் சிலோன் மிசனானது இவ்வாலயத்தினை மையமாகக் கொண்டு பண்டத்தரிப்பில் 1820ஆம் ஆண்டு முதல் இறைபணி, மருத்துவப்பணி, கல்விப்பணி, சமூக மேம்பாட்டுப் பணி என்பனவற்றினை மேற்கொண்டு வந்தது. ஆனாலும் 1831ஆம் ஆண்டு வரை தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை, மானிப்பாய், உடுவில் மற்றும் பண்டத்தரிப்பு ஆகிய 5 ஆலயங்களும் ஒரே நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்தன. 1831ஆம் ஆண்டு இந்த 5 ஆலயங்களும் தனித்தனி நிர்வாகங்களாகப் பிரிக்கப்பட்டதிலிருந்தே இப்பண்டத்தரிப்பு அமெரிக்கன் மிசன் வரலாறு



கணிக்கப்பட்டுள்ளது. இன்று இவ்வாலயம் அமெரிக்க மிசனின் 205 ஆண்டுகள் வரலாற்றினைக் கொண்ட ஆலயமாகத் திகழ்கின்றது. பண்டத்தரிப்பு 1831இல் தனி நிர்வாகமாகின்றபோது 21 அங்கத்தவர்களை கொண்ட சபையாகக் கருதப்பட்டது.

இங்கு பணிகளை ஆரம்பித்த வைத்திய கலாநிதி ஜோன் ஸ்கடர் அவர்களே உலகத்தில் முதன் முதலாக நற்செய்திப் பணிக்காகப் புறப்பட்ட வைத்திய மிசன் தொண்டராவார். இவருடைய 5 சந்ததிகள் வைத்தியர்களாக ஆசியாக் கண்டத்திலே தொடர்ச்சியாக மிசன் பணிகளை செய்து வருவதும் இவருடைய பேத்தியார் ஐடா ஸ்கடர் வேலூரில் உள்ள பிரபலமான வைத்தியசாலையையும் வைத்தியக்கல்லூரியையும் ஆரம்பித்தார் என்பதும் பெருமை தரும் விடயங்களாகும். இப்பண்டத்தரிப்பு ஆலயம் பின்னர் 1847ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் உதயமான திருச்சபை ஐக்கியத்துக்குள் இணைந்து கொண்ட யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் ஒரு ஆலயமாக 2007ஆம் ஆண்டு வரை காணப்பட்டு, பின்பு மறுபடியும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் ஆளுகைக்குள் கொண்டு வரப்பட்டது. இன்று இவ்வாலயமும் குருமனையான ஸ்கடர் இல்லமும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் பணிக்களங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

1980 களுக்கு முன்பு பண்டத்தரிப்பு திருச்சபை என்பது அதிகமான குடும்பங்களைக் கொண்ட பெரிய சபைகளில் ஒன்றாக விளங்கியது, அருகிலே ஹறியற் வின்சிலோ பெண்கள் இல்லம் இரண்டு மாடிகளாகக் கட்டப்பட்டு நூற்றுக்கு மேற்பட்ட பெண்பிள்ளைகளை உருவாக்கிய இடமாகக் காண்படுகின்றது. அருகிலே YMCA ஆலயத்தின் பணிகளுடன் இணைது செயற்படும் ஒரு ஸ்தாபனமாக விளங்கி வருகின்றது. இப்பணி களுக்கென ஆலயத்துக்கு முன்பாகவுள்ள தமது சொந்த வீட்டினை ஆலயப் பணிகளுக்கென திருமதி. ரீட்டா தங்கராஜா அவர்கள் நன்கொடையாக அமெரிக்கன் சிலோன் மிசனுக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

யுத்தமும், யுத்தத்தின் அகோரமும் அநேக மக்களைப் புலம் பெயரச் செய்தது. இன்று அங்கு வாழ்வோர் "எஞ்சியிருப்போர்" (Remnants) இவர்களே மீளவும் பண்டத்தரிப்பினையும், பண்டதரிப்பு திருச்சபையின் பணிகளையும் கட்டியெழுப்பும் பொறுப்புக்களை ஏற்றுச் செயற்படுகின்றனர். உலகின் முதலாவது மருத்துவக் கலாநிதி ஜோன் ஸ்கடர் வாழ்ந்த வீடு, அவருடைய மருத்துவப் பணி நடைபெற்ற டிஸ்பன்சரி, அவர் பிரசங்கம் செய்த தேவாலயம், அவருடைய அருமையான பாதங்கள் பதிக்கப்பட்ட நிலம் இவற்றினை பாதுகாப்பதும் அதனை அடுத்த தலைமுறைக்கு அழியாமல் கையளிப்பதும் இத்தலைமுறையினது தலையாய கடமையாகும்.

தகவல் தொகுப்பு
அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன்

# சமயக் காழ்ப்புணர்வும்... தூதுப்பணியும்...

ஆக்கம் : ஸ்ரீபன் அருளம்பலம்

பல்சமயச் சூழல் கடவுளால் எமக்கு அருளப்பட்ட கொடையாகும். இச்சூழல் எம்மிடையே நல்லுறவை எதிர்பார்த்து நிற்கின்றது. எனினும் தற்காலத்தில் இச்சூழல் காரணமாக பிரிவினைகளும், வேற்றுமைகளும், ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ள முடியாத தன்மைகளும், மலிந்து காணப்படுகின்றது. இது எமது வாழ்விலும், பணியிலும் பதற்றத்தையும், பல சந்தேகங்களையும் ஏற்படுத்துகின்றது. எனவே இச்சூழலின் மத்தியில் எமது தூதுப்பணியை நாம் எவ்வாறு அமைத்துக் கொள்ளலாம் என எமது ஆய்வுக் கட்டுரையில் சிந்திப்போம்.

### தூதுப் பணி:

ஒரு தனி மனிதனோ அல்லது சமூகமோ கடவுளின் அன்பை வார்த்தையாலும், செயலாலும் எடுத்துக் கூறுவதே தூதுப் பணி என பேராயர் வில்லியம் ரெம்பிள் கூறுகின்றார். எனவே தூதுப் பணியில் கடவுளின் அன்பை நாம் பரிமாறிக் கொள்கின்றோம் என M.M.தோமஸ் குறிப்பிடுகின்றார்.

### தூதுப் பணியின் வகைகள்:

கடவுளின் அன்பை மையப்படுத்திய தூதுப்பணிகள் பலவகையுண்டு என தென்னாபிரிக்கா இறையியலாளரான டேவிட் பெஸ் குறிப்பிகின்றார். மேலும் இறையியலின் அடித்தளமாக காணப்படுவது தூதுப்பணியே எனவும் குறிப்பிடுகின்றார். றிச்சேட் பல்கம் என்பவரின் அவதானிப்பின் படி தூதுப்பணி விளிம்பிலிருந்து மையத்தை நோக்கியோ அல்லது மையத்திலிருந்து விளிம்பை நோக்கியோ இடம்பெறுகின்றது எனவும் குறிப்பிகின்றார்.

கடவுளின் அன்பை எடுத்துக் கூறுவதற்கு நற்செய்திப் பணி (மத்தேயு 28: 19 –20), ஒருமைப்பாட்டுப் பணி (யோவான் 17: 21 –22), சூழல் சார்ந்த பணி (ரோமர் 8:22), ஒப்புரவாக்கும் பணி (2 கொரி 5:16–20), அமைதிப்பணி (மத்தேயு 5:8), நீதிப் பணி (திருப்பாடல் 85:10), விடுதலைப் பணி (விடுதலைப் பயணம் 3:7), சர்வமதப் பணி (லூக்கா 7: 1–12), வழிபாட்டுப் பணி (மத்தேயு 5:22–24) போன்ற பணிகளை நாம் குறிப்பிடலாம்.

### சமயக் காழ்ப் புணர்வு:

ஆசிய தேசம் பல சமயங்களின் தோற்றுவாயாகும் . நாம் மற்றவர்களில் இருந்து மற்றவைகளை கற்றுக் கொள்ள வேண்டுமென அடம் சிமித் வலியுறுத்துகின்றார். இதுவே பல்சமய சூழலில் எதிர்பார்ப்பாகும். ஆனால் ஒவ்வொரு சமயங்களும் மற்றைய சமயங்களை எதிர்ப்புணர்வோடு நோக்குவது கவலையளிப்பதாக வெஸ்லி அரியராஜா குறிப்பிடுகின்றார். அவரின் அவதானிப்பின் படி ஒவ்வொரு சமயங்களும் ஏனைய சமயத்தவர்களின் பாதங்களில் அமர்ந்திருந்து கற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார். சமயங்களுக்கிடையே நிலவும் உரசல் நிலை காரணமாக புதிய சமயங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இந்தியாவில் இந்து சமயத்திற்கும், இஸ்லாம் சமயத்திற்கும் இடையே நிலவிய மோதல் நிலையே சீக்கிய சமயம் தோன்றக் காரணமாகும். மேலும் இந்து சமயத்தில் ஏற்பட்ட சீர் திருத்தமே பௌத்த சமயத்தை உலகிற்கு கொண்டு வந்தது. யூத சமயத்தில் ஏற்பட்ட சீர்திருத்தமே கிறிஸ்தவ சமயத்தை உருவாக்கியது. இவ்வாறாக சமய உரசல் நிலை நேர் மறையான காரியங்களை தோற்றுவித்த போதிலும், மறைவான அனுவபங்களே மலிந்துள்ளன. குறிப்பாக கி.பி 1096 ஏற்பட்ட சிலுவை யுத்தத்தின் வடுக்களை இஸ்லாமியர் இன்னமும் மறக்கவில்லை. உயிர் சேதம், உடமைச் சேதம், உறவுச் சிக்கல் போன்றவைகளே சமயங்களுக்கிடையே நிலவும் முரண்பாடுகளால் ஏற்பட்ட விளைவுகளாகும்.

அண்மைக்காலமாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையே சமய காழ்ப்புணர்வு தத்துவ ரீதியிலும், நபர்களுக்கிடையேயும் ஏற்பட்டுள்ளன. இதன் விளைவாக நற்செய்திப் பணியாளர்களின் பணி இடைநிறுத்தப்பட்டமை, அச்சுவேலியில் வழிபாடு இடைநிறுத்தப்பட்டு பின்னர் எதிர்ப்புப் பவனி இந்து மக்களால் முன்னெடுக்கப்பட்டமை கிறிஸ்தவ பணியாளர்களின் பணி இடைநிறுத்தப்பட்டமை போன்ற விளைவுகள் ஏற்பட்டமையை நாம் அவதானிக்கலாம். இவைகள் அனைத்தும் சமய முரண்பாடுகளால் ஏற்பட்ட விளைவுகளேயாகும். எனவே இத்தகைய காழ்ப்புணர்வுகளை அகற்றி சமயங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள நாம் பின்வரும் அனுகு முறைகளை எமது தூதுப் பணியில் கவனத்தில் கொள்ளவேண்டும்.

### *01. நற்செய்திப் பணி மாத்திரம் தூதுப் பணியல்ல:*

எமது தூதுப்பணியில் பெருமளவுக்கு நற்செய்திப் பணியையே நாம் மையப்படுத்தி செயல்படுகின்றோம். ஆனால் திருச்சபை பிற பணிகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். உதாரணமாக நீதிப்பணி, அமைதிப் பணி, ஒப்புரவாதல் பணி, ஒருமைப்பாட்டுப் பணி, சூழலியல் சார்ந்த பணி, சர்வமதப் பணி, போன்ற பல இலக்குகளில் எமது தூதுப்பணியை நாம் மேற்கொள்ளுவோமெனில் அப்பணி சமூக அங்கீகாரம் நிறைந்ததாக காணப்படும். மேலும் மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்கு பலதரப்பட்ட தூதுப்பணி அவசியமாகின்றது. அதனால் வேற்றுமையில் ஒற்றுமையையும், ஒற்றுமையில் வேற்றுமையையும் உருவாக்கக் கூடிய கூட்டொருமை சார்ந்த பணியை எம்மால் முன்னெடுக்க முடியும். இப்பணி சூழல் சார்ந்த இறைபணியாகும். இப்பணி சமயங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்த சிறந்த மார்க்கமாகும்.

### *02. பிரதான கட்டளையை விட ஏனைய கட்டளைகளும் உண்டு.*

எமது தூதுப் பணியில் ஆண்டவர் இயேசுவினால் கொடுக்கப்பட்ட பிரதான கட்டளையை மையப்படுத்தியே நாம் எமது பணியை வகுத்துள்ளோம். மத்தேயு 28: 19–20 உலகம் எங்கும் சென்று சீடராக்கி திருமுழுக்கு கொடுங்கள் என்ற கட்டளையையே நாம் முக்கியத்துவப்படுத்தி கிறிஸ்தவராக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றோம். ஆனால் திருமறையில் பல கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஏன் நாம் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இறைவன் எமது பெற்றோர்களைப் படைத்து இப்பூமியை ஆண்டு கொண்டு இயற்கையை பராமரியுங்கள் என்ற கட்டளையை அவர்களுக்கு கொடுத்தார். இக்கட்டளையை நாம் முக்கியத்துவப்படுத்துவதில்லை. நாம் இயற்கைக்கு விரோதமாக தவறு செய்ததன் விளைவாகவே இன்று பல இன்னல்களை அனுபவிக்கின்றோம். திருதந்தை பிரான்சிஸ். அவர்களின் கருத்துப்படி கடவுள் எமது தவறுகளை மன்னிப்பார். ஆனால் இயற்கையோ எதிர்த் தாக்கம் புரியும் என்கின்றார். எனவே திருச்சபை இக்கட்டளைகளைக் குறித்து சிறப்புக் கவனம் எடுக்க வேண்டும். நற்செய்தி, லூக்கா 4:18–22 ஆண்டவர் இயேசுவின் இன்னொரு கட்டளையை நாம் பார்க்கின்றோம். ஏழையர்க்கும் சிறைப்பட்டோருக்கும் விடுதலை, பார்வையற்றோருக்கு பார்வை, நொருங்குண்டோருக்கு ஆறுதல், கடவுளுடைய வருடத்தை அறிக்கையிடல் போன்ற இலக்குகளை கட்டளை தாங்கியுள்ளது. எனினும் இக்கட்டளைக்கு நாம் அதிகளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மேலும் யோவான் 13: 33–35 இயேசு ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள் என்னும் அன்புசார்ந்த கட்டளையை மையப்படுத்துகின்றார். இதுவே சீடத்துவத்தில் அடித்தளமாகும். எனினும் திருச்சபை இக்கட்டளையைக் குறித்து அதிகம் கவலைப்படுவதில்லை. எனவே எமது தூதுப் பணியில் இயேசுவின் பிரதான கட்டளைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதே நேரத்தில் ஏனைய கட்டளைகளுக்கும் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். இவ்வாறாக நாம் கவனம் செலுத்தும் போது பல்சமயச் சூழலில் எழுகின்ற முரண்பாடுகளை எம்மால் நிவர்த்தி செய்ய முடியும். ஒருபுறம் இயேசுவின்

(12ஆம் பக்கம் பார்க்க)

# Prayers for the Plain Man

- William Barclay

## FOURTH DAY

### In the Morning

O Lord God, before we go out on the duties and the tasks of this day, we ask You to direct, to control, and to guide us all through its hours.

Grant that today we may never for one moment forget Your presence.

Grant that we mav take no step, and that we may come to no decision, without Your guidance, and that, before we act, we may ever seek to find Your will for us.

Be on our lips that we may speak no evil word.

Be in our eyes that they may never linger on any forbidden thing.

Be on our hands that we may do our own work with diligence, and serve the needs of others with eagerness.

Be in our minds that no soiled or bitter thought may gain an entry to them.

Be in our hearts that they may be warm with love for You, and for our fellow-men.

Help us to begin, to continue, and to end this day in You: through Jesus Christ our Lord. Amen.

### In the Evening

O God, our Father, Master of all good workmen, always at evening time we remember the things which we have left undone.



Forgive us for the promises we made and did not carry out.

Forgive us for the resolutions we took and did not keep

Forgive us for the tasks we began and never finished.

Grant that we may never put off a task or delay a decision until tomorrow, when it should be done and taken today, Help us so to live that, when-ever Your call comes for us, at morn-ing, at midday, or at evening, it may find us ready.

Now grant unto us this night the sleep which will bring rest to our bodies and peace to our minds; and grant that we may rise tomorrow to be bet ter workmen and better servants of our Lord. This we ask for Your love's sake. Amen.

# பிராந்திய நிகழ்வுகள்

## பெந்தகோஸ்தே பெருவிழா

“மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்” என்று யோவேல் தீர்க்கதரிசி முன்னுரைத்தப்படியே திருத்துாதர் பணிகள் வழியாக அதன் நிறைவேறுதல் அனைவர் மேலும் பொழிந்தருளப்பட்டது. அந்த வல்லமையின் மகத்துவத்தினை பரிசுத்த ஆவியானவரின் பெந்தக்கோஸ்தே நாள் வழியாக உணரும்




பொருட்டு 09.06.2025 திங்கட்கிழமை அன்று நவாலி, அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை வாலிபர்களின் முன்னெடுப்பிலும், அருட்பணி. ம. ஜெயானந்தராசா அவர்களின் தலைமையில் மாலை 6:45 மணியளவில் நற்செய்தி கூட்டம் ஒன்று மக்களின் விசுவாசத்தை வலுப்படுத்தும் வகையில் திருச்சபை முற்றத்தில் நடைபெற்றது. குறிப்பாக அன்றைய நாளில் யாழ் பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. எம். டி. போல்சுரேஸ் அவர்கள் ஆரம்ப



ஜெபத்தினை ஏறெடுக்க துதி வழிபாட்டின் வழியாக சகோ. சி. அற்புதஜீவன் (CTS) வழிநடத்தினர். மேலும் இசைவாத்தியத்தியங்கள் வழியாக சகோ. யோ. டொறின்டன், செல்வன். அபினாஷ் டிசான், மற்றும் திரு. பிளசிங் ஆகியோர் வழிபாட்டிற்கு வலுசேர்த்தனர். இறைவார்த்தையை அருட்பணி. வி. மூர்த்தி (பப்டிஸ்த திருச்சபை) அவர்கள் அன்றைய நாளினை ஜெப சிந்தனையோடு சிறப்புற கொண்டு சென்றனர். இந்த நற்செய்தி இறை கூடுகையில் 80ற்கும் மேற்பட்ட விசுவாசிகள் கலந்து கொண்டு இறையாசியை பெற்று கொண்டனர் என்பது இறை ஐக்கியத்தினை வெளிப்படுத்தி நிற்கின்றது.

## ஈஸ்டர் பஜனைகள்

பாவத்தில் வீழ்த்த மனுக்குலத்தை மீட்டெடுக்க சிலுவையில் தன் உயிரை கொடுத்து மரித்தோர் உயிர்த்தெழுவான் என்பதை தன் உயிர்பின் வழியாக அற்புதமாக்கிய இயேசு கிறிஸ்துவின் புனித நாளில் இசைகளோடு இயம்பும்



வகையில் ஏப்பிரல் 20, 2025 அன்று மாலை சத்தியபுரம் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையினரின் ஏற்பாட்டில் உயிர்ப்பின் பஜனை ஆலய முற்றத்தில் சிறப்புற நடைபெற்றது. இதன்போது வாலிபர்களினால் இயற்றப்பட்ட பாடல்கள் மூலமும் ஏனைய பாடல்கள் மூலமும் இறை நாமத்தை மகிமைப்படுத்தினர். மேலும் இறைவார்த்தையினை அருட்பணி. அ. ஸ்ரீபன் அவர்கள் வழங்கியிருந்தார்.

அதேபோல் பூவரசங்குளம் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் ஏற்பாட்டில் உயிர்ப்பின் பஜனை நிகழ்வு ஏப்பிரல் 27, 2025 அன்று பூவரசங்குளம் ஆலயத்தில் சிறப்புற நடைபெற்றது. இதில் வவுனியா, மறவன்குளம்,



கல்மடு ஆகிய திருச்சபை விசுவாசிகள் கலந்துகொண்டதுடன் தங்களது பங்களிப்பையும் வழங்கியிருந்தனர். மேலும் உயிர்ப்பின் இறைவார்த்தையை மெதடிஸ்த திருஅவையின் அருட்பணியாளர் அருட்பணி. அஜீஸ்கரன் அவர்களால் பகிரப்பட்டது. வன்னிப் பிராந்தியத்தின் குருமுதல்வர் அருட்பணி. ஆர். ஜோன் செல்வம் அவர்கள் தலைமையில் இவ் பஜனை நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## கல்வாரி அன்பு...

கிறிஸ்தவ வாழ்க்கையில் மிக முக்கியமான காலங்களில் ஒன்று பெரிய தவக்காலமாகும். ஒவ்வொரு திருச்சபைகளும் இயேசு கிறிஸ்து சிலுவையில் கூறிய வார்த்தைகளை குறித்து சிந்தித்து தம்மை ஆராய்ந்து அந்த வாழ்வோடு தம்மை இணைந்து பார்க்கும் ஓர் புனிதகாலமாகும். இயேசு கிறிஸ்துவின் வெற்றியின் நாட்களை சிறப்பிக்கும் வகையில் அக்கராயன் சமாதானபுரம் திருச்சபை தவக்கால சிலுவை பாடுகளை நிலைகளை அவ் மக்களோடு சாட்சி பகரும் பொருட்டு செயற்பாடுகள் வழியாக தம்மை வெளிப்படுத்தினர். மேலும் தவக்கால பஜனையாக திருச்சபை முற்றத்தில் சமாதானபுரம் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் பாடகர் குழாமுடன்



கோணாவில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் பாடகர் குழாம் மற்றும் அக்காரயன் மெதடிஸ்த திருச்சபையின் பாடகர் குழாமும் இணைந்து சிலுவை பலிக்களப் பாடல்களை பாடி இயேசுவின் அன்பை எமக்கு வெளிப்படுத்தினர். இதன்போது அருட்பணி. டேவிட் நிருஷ்கன் அவர்களால் நற்கருணை கொடுக்கப்பட்டது. இந் நிகழ்வை அருட்பணி. ரி. சுசேந்தன் அவர்கள் தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
39 வது பட்டமளிப்பு விழாவில் முதுமாணி
பட்டத்தை பெற்ற அமெரிக்கன் சிலோன்
மிசன் திருச்சபையின் ஊழியரும்,
யாழ் பிராந்திய நற்செய்திப் பணி
இணைப்பாளருமான
**அருட்பணி. என். நேசன் கெனடி**
அவர்களுக்கு
உதயதாரகையின் பாராட்டுக்கள்

## பெண்கள் தின சிறப்பு ஒன்றுகூடல் - *யாழ் பிராந்தியம்*

பெண்கள் எப்போதும் இறை விசுவாசத்திலும் இறை அன்பிலும் முன்மாதிரியானவர்கள். அதனடிப்படையிலே பெண்கள் தங்களுடைய ஜெப வாழ்வையும் விசுவாசத்தையும் பெலப்படுத்தும்



நோக்குடன் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் யாழ் பிராந்தியப் பெண்களுக்கான உபவாசக் கூடுகை ஒன்று கடந்த மார்ச், 31ம் 2025அன்று உடுவில் நல்லாயன் ஆலயத்தில் பிராந்தியப் பெண்கள் சங்க இணைப்பாளர் திருமதி. டொறின் போல்சுரேஸ் அவர்களின் தலைமையில் சிறப்புற நடாத்தப்பட்டது.

இதன்போது யாழ் பிராந்தியச் சமயகல்விக் குழுவின் இணைப்பாளர் அருட்பணி. சுதாசினி சுதாகர் அவர்களுடன் அருட்சகோதரி ரேவதி அவர்களும் இணைந்து சிறப்புற அன்றையநாள் நிகழ்வுகளைக் கொண்டு நடத்தியதோடு பெண்களை ஜெபத்திலும், அவர்களுக்கான செயலமர்வு, பாடல்கள், விளையாட்டு போன்றவற்றையும் செயல்படுத்தி அனைத்துப் பெண்களையும் உற்சாகப்படுத்தினர். அங்கு கலந்து கொண்ட பிராந்தியத் திருச்சபைப் பெண்கள் ஒவ்வொருவருக்கும் ஆக்கபூர்வமாகவும் மாற்றத்தையும் உணர்வையும் தூண்டியது என்றால் மிகையாகாது.

# கவிக்களம்

## போட்டி இல.03 இன் பரிசிலுக்குரிய கவிதை

### கல்வாரியில் தாயின் அழுகுரல்

இதயம் இருண்டு கனத்தது
ஓர்கணம் கல்வாரியில் //
பெத்தவள் கண்கள் காண
அவள்தம் பெருமானையே //
சிதைத்து தொங்கவிட்ட காட்சிதனை விளக்குவேன் என்னவென்று//

சுமந்த அடிவயிறு
கொதித்தது தீப்பிழம்பாய்//
அறிவு மங்கி பித்து பிடித்து
துடித்தது அவள் கண்கள் //
கண்ணீரின் வலியிலே
துடைத்திடும் கைகளும் //
சிலுவையில் பிணைந்தே கிடக்கிறதே//

உடல் கிழிந்து உயிர் ஊசலாடி
உதிரம் வழிந்தோட //
வேதனையின் சூட்டில் கருகும்
அவள் மகனின் நிலைதனை //
யாரிடம் எடுத்துயம்புவதோ
நீதி மறுக்கப்பட்ட இவ்வுலகில் //

மக்களின் விடியலுக்காய்
எழும்பிய குரல் தனை நசுக்கிய காட்சி//
அநீதியின் கூக்குரலாய் அவள் காதில்
கூர் முனை வாளாய் குத்த //
அழுதாள் புலம்பினாள்
யாரும் வரவில்லை அவள்நிலை காண//

அவள் என் செய்வாள்
அவன் உயிரை மீட்க //
விடுதலை பிறப்பெடுக்க தன்னுயிரை
தியாகம் செய்தான் அன்றோ//
கூனிக்குறுகி தான் போனாள் ஓர்கணம் //

இக்காட்சி தனை விளக்கும் என் நிலையும்
மாறா துயரால் நிறைந்தே வழிகிறது //
என் பேனா கூர்முனைகளும் நடுநடுங்கி
கண்ணீர் துளியென சொரிகிறது //
பார் மீட்கும் பார்த்தீபன் பாரங்கள்
எனக்காக என்றெண்ணி உருகினேன்//

மனம்திரும்பினேன் என் மன்னவன்
இயேசு கிறிஸ்துவின் முகம் காணவே //

ஆக்கம்: **மகேந்திரம் நிருஜினி**
அராலி திருச்சபை

### தியாகத்தின் வெள்ளி

ஒப்பாரிகள் உறைந்து கிடக்கும்
கல்வாரி மலை தனிலே - காவிய நாயகன்
மனிக்குலத்தின் பாவத்தை மரத்தில் பலியிட்ட
மாசற்ற தியாகத்தின் நாள் அது.

அவமானத்தின் சின்னத்திற்கு அங்கீகாரம் கொடுத்து,
அதைப் புனிதமெனப் பறை சாற்றிய புதிய நாள்
பாவத்தின் மூட்டைகளைச் சுமந்து
பாவிகளிற்கு விடை கொடுத்த புனித நாள் அது.

வெயிலின் கொடுமைதனை வியர்வை
எடுத்துரைத்த கணப்பொழுதின் விஞ்ஞானம்
உடல் தன்னில் வடிவது குருதி அல்ல - மாறாக
மறைபொருளாம் நற்கருணையின் மாசற்ற நாள் அது

பலியின் தலையின் அமர்ந்ததாள் - முள்முடியே
தன்னைக் கிரீடமாக்கிய பொன்நாளது
மகிபனின் தியாகத்தால் முட்களிற்கும் - இடமுண்டு
என்பதனை முள்முடிகள் நிரூபித்த நாள் அது.

மகனின் படுகொலையைக் கண்ட - அன்னை
மரியின் வேதனை கல்வாரிக்குள்ளே புதைந்தது.
குற்றமில்லாமிருந்தும் தண்டனை ஏற்பான் - என்ற
தாயின் மௌனம் காவியமான கணம் அது.

தாயவளின் கதறலை அக்கணமே கண்டுணர்ந்து
சிநேகத்தின் சிறப்பினை எடுத்துரைக்க
மூன்றாவதாய் மொழிந்த உன் அரவணைப்பு
இன்றும் இவ்வுலகின் மகத்தான தேவையது.

மீட்பு என்ற ஒற்றைச் சொல்லின்
மறைபொருளின் இறைவாக்கை வாழ்வாக்க
திருவுடலை பாவியெமக்காய் பலியிட்ட
மறுவாழ்வின் மகிமையான பெரிய வெள்ளியது.

ஆக்கம்: **திருமதி M. துர்க்காதேவி**
முறிகண்டி திருச்சபை.

### அதோ உன் மகன்.. அதோ உன் தாய்...

பாரிய சிலுவையில் பரமனை வைத்து
ஆணிகளால் அறைந்து
யாரிகள் செய்த பொல்லாக் கொடுமையால்
பொறுமையால் இருந்து
யாரிடம் சொல்லி யாசிப்ப தென்று
யாவரின் உளமும்வெந்து
மார்பினில் அடித்து கதறியே சென்றனர்
மாந்தரும் மனமும்நொந்து

அன்னை மரியாள் சிலுவையின் அருகே
இன்னும் அவருடனே - தனக்கு
அன்பாய் இருந்த சீடனாம் யோவானையும்
கண்ணுற்று உடனே
பெண்ணே அதோ உன் மகனென் றுரைத்து
சீடனையும் விளித்தே - அதோ
உன் தாய் என்றதுமேற்றுக் கொண்டான் அவளை
அந்நேரம் இருந்தே

அந்த வேளை ஏறக் குறைய
ஆறாம் மணியிருக்கும்
அந்த நேரம் தொடங்கி அடுத்து
ஒன்பதாம் மணிவரைக்கும்
அந்த காரம் ஆகியே இருளாய்
ஆனது பூமியெங்கும்
இந்த வேளை சூரியன் இருண்டு
ஆலயத்தின் உள்ளும்

செப்பமாய் இருந்த திரைச்சீலை நடுவாய்
இரண்டானதே கிழிந்து - இறைமகன்
அப்பா பிதாவே உமது கையிலென்
ஆவியை இப்போது
ஒப்பு விக்கிறேன் என்றவர் உரத்த
சத்தமாய் அப்போது - தன்
ஒப்பில்லா உயிரை ஒப்புக் கொடுத்தார்
உன்னத னாரிடத்து

இந்நிலை கண்ட இறையென்னை வேதனை
மிகக்கொண்டு தளித்தாள்
தன்னிலை உரைத்திட தரணியில் யாருமின்றி
தேவனையே செபித்தாள்
வன்னிலை யால்குருசில் அறையுண்ட நிலைகண்டு
கண்ணீராய் வடித்தாள்
முன்னிலை யில்மகன் இன்னுயிர் நீத்திடக்
கண்டுமனம் துடித்தாள்.

ஆக்கம்: **டே. த. எட்வின் அரசரட்ணம்**
உடுவில் திருச்சபை

### விழுப்புண்பட்ட வீரன் தன் நடுகல்லைத் தானே சுமக்கிறானோ...

காண்கையில் கல்லையும்
கலங்கிட செய்திடும்
காண்போரை உருகிட செய்திடும்
காவியம் ஒன்று
இறை காவியம் இது....

(11ஆம் பக்கம் பார்க்க)

# கௌரவ கலாநிதிப் பட்டங்கள்

எமது அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் பணிகளில் அப்பணிப்புடன் செயற்படும் நால்வருக்கு அவர்களுடைய பணிகளின் மகத்துவம் கருதி வெவ்வேறு கல்வி நிறுவனங்களால் கௌரவ கலாநிதி பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபைக்கு பெருமை சேர்க்கும் இவ் விடயத்தில் உதயதாரகை பேருவுவகை கொள்கிறது. இவ்வகையில் பின்வரும் நால்வர் கௌரவ கலாநிதி பட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

### 01. அருட்பணி பிறேமன் ராஜன் றொகான்

எமது சிரேஸ்ட அருட்டணியாளர்களில் ஒருவரும் கொழும்பு திருச்சபையின் அருட்பணியாளருமான அருட்பணி. பிறேமன் ராஜன் றொகான் அவர்கள் ஐக்கிய அமெரிக்க தேசத்தின் வடகிழக்கு அலபாமா பல்கலைக் கழகத்தினால்




(Northeast Alabama University of USA) உலகளாவிய அளவில் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட கௌரவ கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளார். இவருடைய அருட்பணி வாழ்வில் கல்விசார் மற்றும் அறம் சார் சமூகத் தேவைகளை இனம் கண்டு, பல சவால்களுக்கு மத்தியில் துணிச்சலுடன் ஒருமைப்பாட்டுக்காக செயற்பட்டமையினைப் பாராட்டி இந்த கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக 2019ஆம் ஆண்டில் இலங்கையில் ஈஸ்டர் தினத்தன்று நடைபெற்ற குண்டுத் தாக்குதலின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமிய - தமிழ் உறவுகளுக்கிடையில் அமைதியினை உண்டு பண்ணும் உயரிய பணியினை இவர் தலைமைதாங்கி நடாத்தியிருந்தார். இதற்காக இவருக்கு **இறையியிலில் கௌரவ கலாநிதிப்பட்டம்** (Honorary Doctorate in Theology) வழங்கப்பட்டது. இந்நிகழ்வு 2024 டிசம்பர் 15ம் திகதி மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### 02. அருட்பணி. எஸ். ஐ. ஆனந்தராஜன்

அருட்பணி. எஸ். ஐ. ஆனந்தராஜன் அவர்கள் எமது திருச்சபையின் ஓய்வு பெற்ற குருவாக இருந்தாலும் தொடர்ந்தும் திருச்சபையின் பணிகளிலே ஆர்வத்தோடு உதவி செய்து வருகின்ற ஒருவர். 1995 ஒக்டோபர் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வின்போது மக்களோடு மக்களாக இவர் இடம் பெயர்ந்து செல்லாமல், இடம் பெயர்ந்து செல்ல முடியாமல் உறவுகளால் கைவிடப்பட்ட வயோதிப் பெண்கள் 24 பேரை ஒன்று சேர்த்து நகர்ப்பணித் திருச்சபை வளாகத்தில் அவர்களைப் பேணிப் பாதுகாத்தவர். **"சூரியக் கதிர்"** இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ்ப்பாணத்தை இராணுவம் ஷெல் வீச்சுக்களுடன் நெருங்கி வருகையில், யாழ் வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவில் அவர்களைப் பாதுகாத்துத் வைத்திருந்தவர். ஆனாலும் இவருடைய பராமரிப்பின் இருவர் நோய் காரணமாகவும், ஒருவர் ஷெல் தாக்குதலிலும் மரணத்தைத் தழுவிக் கொண்டனர். இவர்களை அதே வளாகத்தில் தானே தனியாக கிடங்கு வெட்டி அடக்கம் செய்தார். இறுதியுத்தம் 2008 இல் வன்னிப் பெரும்நிலப்பரப்பில் ஆரம்பித்த போதும் மக்களோடு இருந்து மக்களுக்காக சுதந்திரபுரத்தில் ஷெல் வீச்சில் காயமடைந்தார். இவர் வாழ்ந்து பணி செய்த இடங்களில் அதிகம் மக்களை நேசித்து மக்களுடன் வாழ்ந்த ஒருவர்.



இவருடைய பணிகளைக் குறித்து அறிந்து கொண்ட "MASS MEDIA GOSPEL MISSION" என்னும் கிறிஸ்தவ கல்வி நிறுவனம் 14 ஜனவரி 2024 இல் கிளிநொச்சி பலநோக்குக் கூட்டுறவுத் சங்க மண்டபத்தில் வைத்து இவருக்கு **கௌரவ கலாநிதிப்** பட்டத்தினை திருச்சபையும் நற்செய்திப் பணியும் எனும் துறையில் வழங்கிக் கௌரவித்தது. இந்நிறுவனம் ஐக்கிய இராச்சியத்தில் (UK) BIM நிறுவனத்துடனும் ஐக்கிய அமெரிக்காவின் EIM நிறுவனத்துடனும் ஒன்றிணைக்கப்பட்டது என்பது குறிப்பிடதக்கது.

### 03. அருட்பணி. ஏ. ஜெயசீலன்

அருட்பணி. வேலு ஜெயசீலன் அவர்கள் தன்னுடைய இளம் வயதில் நிலஅளவைத் திணைக்களத்தின் அலுவலராக இந்தியாவிலும் இலங்கையிலும் நீண்ட காலம் பணி புரிந்தவர். அதன் பின்னர் இவர் தன்னுடைய இறைபணியினை முதன் முதலில் **"இல்லந்தோறும் நற்செய்தி "** (Every Home Crusade) வழியாக யாழ் நல்லூர் பிரதேசத்தில் ஆரம்பித்தார். பின்னர் இவர் "ஒல்லாந்தர் சீர்திருத்த திருச்சபை" (Dutch Reformed Church) என்று அழைக்கப்பட்டதும் தற்போது "கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபை" (Christion Reformed Church) என்று அழைக்கப படுகின்றதுமான திருச்சபையில் பல வருடங்கள் குருவானவராகவும், நற்செய்திப் பணியாளராவும்



இலங்கையின் பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றியதுடன் **"தூதன்"** எனும் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றினார். அத்துடன் நீண்ட காலமாக கிறிஸ்தவ திருமறையின் மொழிபெயர்ப்பு குழுவில் இலங்கை வேதாகமச் சங்கத்துடன் இணைந்து பணியாற்றுகின்றார்.

இவருடைய பணிகளைக் குறித்து அறிந்து "MASS MEDIA GOSPEL MISSION" எனும் கிறிஸ்தவ கல்வி நிறுவனம் 27 ஏப்பிரல் 2025 இல் இவருக்கு **தெய்வீகவியலில் கௌரவ கலாநிதிப்** பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது. இந்தப் பட்டமளிப்பு விழவின் ஆரம்ப செபத்தினை அருட்கலாநிதி. பி. ராஜன் றொகான் (கொழும்பு திருச்சபை) அவர்கள் ஏறெடுத்தார். இந்நிறுவனம் ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்க கல்வி நிறுவனங்களுடன் இணைப்பினைக் கொண்டது.

### 04. கலாநிதி தர்சன் அம்பலவாணர்

எமது அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் சமூகப்பணிகளுக்கு உச்சமான அமைப்பாக விளங்கும் சமுதாயக் கல்லூரியின் (Community College) உருவாக்கத்திற்குப் பொறுப்பாளராசுவும் வாலிபர் தலைமைத்துவப் பயிற்சி நெறிகளின் இயக்குநராகவும் விளங்கும் கலாநிதி. தர்சன் அம்பலவாணர் அவர்கள் அமெரிக்காவில் உள்ள ஈடின் இறையியல் கல்லூரியின் (Eden Theological Seminary) 175வது பட்டமளிப்பு விழா கடந்த 16 மே 2025 இல் கல்லூரியின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது ஈடின் இறையியல் கல்லூரியினால் இவருடைய அளப்பெரிய சேவைகளுக்காக **கௌரவ கலாநிதிப் பட்டம்** வழங்கி கௌரவிக்கப் பட்டார்.

இவர் தன்னுடைய M.Div மற்றும் Th.M பட்டங்களை அமெரிக்காவின் பிறின்ஸ்டன் இறையியல் கல்லூரியிலும் கலாநிதிப் பட்டத்தினை அமெரிக்காவின் ஹார்வேட் பல்கலைக் கழகத்திலும் பெற்றுக் கொண்டவர். பல்கலைக்கழகக் கற்கை நெறிகளை நிறைவு செய்த இவர் தன்னுடைய தந்தையார் பேராயர் பேரருட்கலாநிதி. D. J. அம்பலவாணர், தாயார் மருத்துவ கலாநிதி. சந்திரா அம்பலவாணர் அவர்களுடைய பாதையிலே தன்னுடைய தாய் நாட்டில் வாழும் துன்புறும் மக்களுக்காகப் பணியாற்ற 2008ம் ஆண்டளவில் தாயகம் திரும்புனார். இவர் குறிப்பாக ஒதுக்கப்பட்ட, போரினால் வலுவிழந்த பெண்கள் மத்தியிலே பணிபுரிந்தமைக்காகவும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையினால் மட்டக்களப்பில் நடாத்தப்படுகின்ற பரி. யோவான் தொழிற்பயிற்சி நிலையத்தினை முனைப்புடன் நடாத்துவதற்கு பல்வேறு நிலைகளில் பாரிய பங்களிப்பினைச்




செய்து வந்தற்காகவும் ஒடுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்ட வாலிபப் பெண்களைத் தெரிந்து அவர்களை தெற்காசிய மற்றும் ஐரோப்பிய பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பி பட்டப்படிப்புக்களை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்களை உருவாக்கியமைக்காகவும் அதனை நெறிப்படுத்து வதற்காகவும் அதற்கான நிதி வளங்களைக் கண்டு கொண்டதற்காகவும் சி.ஏ.சி.எம் திருச்சபையின் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் இறையியல் கல்வி இயக்குநராவும் குருமாருடைய மேற்படிப்புக்கான ஊக்குவிப்பாளராகவும் செயலாற்றி வருவதற்காகவும் சூழமைவு இறையியல் உருவாக்கத்துக்கான உக்குவிப்பளாராக பணியாற்றுவதற்காகவும் ஈடின் இறையியல் கல்லூரிக்கும் சுன்னாகம் இறையியல் கல்லூரிக்குமான உறவுப்பாலத்தை உருவாக்கி அநேக குருமார் கல்வி பெறும் வாய்ப்பினை உருவாக்கியதோடு ஈடின் இறையியல் கல்லூரியின் விரிவுரையாளர்களின் குழுமத்தில் பங்கேற்று செயற்படும் ஆலோசகராகவும் செயற்படு வருவதற்காக ஈடின் இறையியல் கல்லூரி இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்ததுள்ளது.

இவர்களை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபைச் சமூகத்துடன் இணைந்து உதயதாரகைப் பத்திரிகையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றது.

# நம்பிக்கையுடன் நல்ல விதை ...

(01ஆம் பக்க தொடர்ச்சி)

செய்யப்பட்டனர். திருச்சபையின் செயலாளரால் 13வது வருடாந்தப் பொதுப் பேரவைக் கூட்டத்திற்கான அங்கத்தவர்களின் வரவு பதிவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து திருச்சபையின் தலைவர் பிதா, குமாரன், பரிசுத்தாவியானவரின் பேரினால் 13வது வருடாந்தப் பொதுப் பேரவைக் கூட்டத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

2024ம் ஆண்டு பேரவைக் கூட்டங்களுக்குப் பின்னர் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தவர்களுக்கான அனுதாபப் பிரேரணைகள் ஏறெடுக்கப்பட்டன. இப்பிரேரணைகளில் பின்வருபவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது: அருட்பணி. ஜெ. அன்ரனி சுதாகர் (அருட்பணியாளர் சி.ஏ.சி.எம்) கத்தோலிக்கத் திருஅவையின் போப் பிரான்சிஸ் மற்றும் மட்டு அம்பாறை இளைப்பாறிய ஆயர் யோசேப் பொன்னையா ஆகியோருடன் கடந்த காலங்களில் பேரவையின் அங்கத்தவாகளாக இருந்த திரு. வி. எஸ். இராசதுரை (சத்தியபுரம் திருச்சபை)



திரு. ப. சந்திரசேகரம் (நுணாவில் திருச்சபை) திரு. சேவி சுப்பிரமணியம் (கோணாவில் திருச்சபை) திரு. க. சிவக்குமார் (உடப்புசலாவ திருச்சபை) இவர்களின் வாழ்வுக்கும் பணிக்குமாக இறைவனுக்கு நன்றி செலுத்தி அருட்பணி. ரி. ஈ. அசோக்குமார் மற்றும் அருட்பணி. டி. எஸ். மதியாபரணம் ஆகியோர் செபத்தில் வழிநடத்தினார்கள். தொடர்ந்து அருட்பணி. ஜெ. அன்ரனி சுதாகர் அவர்களிற்கான இரங்கலுரையினை கிறிஸ்த இறையியல் கல்லூரியின் அதிபர் அருட்பணி. ஏ. கமலக்குமாரன் அவர்கள் வழங்கினார்.

திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ் தேவகுணானந்தன் அவர்கள் "நம்பிக்கையுடன் நல்ல விதைகளை நாட்டுவோம்" என்னும் பேரவையின் தொனிப் பொருளில் தலைமையுரையை ஆற்றியதுடன் பேரவைக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்றார்.

இதன் பின்னர் திருச்சபையின் சட்டபூர்வ நிலமைகள் குறித்து திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களாலும் திருச்சபையின் பொருளாளர் திரு. என். கே. ரமேஸ்குமார் அவர்களாலும் விளக்கமளிக்கப்பட்டது. எமது திருச்சபைக்கு எதிராக தொடரப்பட்டிருந்த பிரதான வழக்கு மனுதாரர்களால் விலக்கிக்கொள்ளப்பட்ட பின்னர் மேல் முறையிட்டு நீதிமன்ற தீர்ப்புக்கு அமைவாக அமெரிக்கன் சிலோன் மிசனின்



அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை பரிபாலிக்கும் அதிகாரம் தி அமெரிக்கன் சிலோன் மிசனின் உத்தியோகத்தர்களான அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ், திரு. என். கே. ரமேஸ்குமார் ஆகியோருக்கே இருப்பதாகவும் அதற்கான அறிவித்தல் 23.05.2025 பத்திரிகையின் ஊடாக வெளியிடப்பட்டிருப்பதாகவும் இவர்களால் பேரவைக்கு தெரிவிக்கப்பட்டது.

நடைபெற்று முடிந்த 12வது வருடாந்த பொதுப் பேரவைக்கூட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு திருத்தங்கள், சேர்க்கைகள், கருத்துப் பரிமாற்றங்களின். பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் 26.04.2025 அன்று நடைபெற்ற இறுதிச் செயற்குழுவின் கூட்ட அறிக்கை செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டு திருத்தங்களின் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மதிய உணவு இடைவேளையின் பின்னர் நான்கு பிராந்தியங்களின் அறிக்கைகளும், அருட்பணியாளர் ஒன்றிய அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு கருத்துப் பரிமாற்றங்களின் பின்னர் நன்றியுடனும் பாராட்டுக்களுடனும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அருட்பணி. ஜொசேப் ஜெயசீலன் அவர்களின் ஜெபத்துடனும் திருச்சபையின் தலைவருடைய ஆசீர்வாதத்துடனும் முதல் நாள் கூட்டம் மாலை 05 மணியளவில் நிறைவுற்றது.

13வது வருடாந்தப் பொதுப் பேரவைக் கூட்டத்தின் இரண்டாம் நாள் கூட்டமானது 2025 மே மாதம் 24ம் திகதியன்று காலை 9.00 மணியளவில் இறைவழிபாட்டுடன் மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி கேட்போர் கூடத்தில் ஆரம்பமானது. இவ் வழிபாட்டினை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் அதிபர் அருட்பணி. ஏ. கமலக்குமாரன் அவர்கள் தலைமையில் யாழ் மற்றும் கொழும்பு மலையக பிராந்திய அங்கத்தவர்கள் இணைந்து




நடாத்தினார்கள். கொழும்பு மலையக பிராந்தியக் குருமுதல்வர் அருட்பணி ராஜன் றொகான் அவர்கள் யோவான் 16ம் அதிகாரத்தை மையப்படுத்தி இறை செய்தியினைப் பகிர்ந்துகொண்டார். இருநாள் வழிபாடுகளும் அருட்பணி. எஸ். யூட் வினோதன், திருமதி. கே. சுஜானு ஆகியோரது இசைமீட்டலுடன், திருமதி. ரி. நிரூஜா அவர்களின் பாடல் வழிநடத்தலுடன் சிறப்புற நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

வழிபாட்டின் பின்னர் திருச்சபையின் செயலாளரால் 13வது வருடாந்தப் பொதுப் பேரவைக் கூட்டத்தின் இரண்டாம் நாள் அமர்விற்கான அங்கத்தவர்களின் வரவு பதிவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து திருச்சபையின் தலைவர் பிதா, குமாரன், பரிசுத்தாவியானவரின் பேரினால் 13வது வருடாந்தப் பொதுப் பேரவைக் கூட்டத்தின் இரண்டாம் நாள் அமர்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். சேவைத் திருப்பணி மன்றின் அறிக்கை அதன் இயக்குனரால் சமர்ப்பிக்கப்பட்டு கருத்துப் பரிமாற்றங்களின் பின்னர் பாராட்டுக்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பரி. யோவான் தொழிற்பயிற்சி நிலைய அறிக்கை அதன் அதிபரால் சமர்ப்பிக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் குறித்த கருத்துப் பரிமாற்றங்களின் பின்னர் நன்றிகளுடனும் பாராட்டுக்களுடனும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கிறிஸ்த இறையியல் கல்லூரியின் அறிக்கை அதன் அதிபரால் சமர்ப்பிக்கப்பட்டது. கல்லூரியில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து பேரவையால் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் புதிய ஊழியர் அறிமுகமும் ஏற்றுக்கொள்ளுதலும் இடம்பெற்றது. இதன் பிரகாரம் சகோ. எஸ். அற்புதஜீவன், சகோ. சி. ஹறோன், சகோ. வை. டொறின்டன் டானியல் ஆகியோர் தமது நான்கு வருட இறையியல் கல்வியை நிறைவுசெய்து தற்போது திருப்பணிகயில் ஈடுபடத் தகுதியுடையவர்களாக உள்ளனர் என கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் அதிபரினால் அவர்கள் மூவரும் அறிமுகப்படுத்தப்பட, அவர்களை பேரவை ஏற்றுக்கொண்டது.

மதிய உணவு இடைவேளையின் பின்னர் சிறுவர் மற்றும் சமயக் கல்விக் குழுவினதும் வாலிபர் பணிமன்றினதும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு, அவை பாராட்டுக்களுடனும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. திருச்சபையின் கணக்கறிக்கைகள் பொருளாளர் திரு. என். கே. ரமேஸ்குமார் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது. இளைப்பாறும் குருமார்களான



அருட்பணி. ஜொசேப் ஜெயசீலன், அருட்பணி. ஜெரோம் போல் ஆகியோருடைய சேவை நீடிப்புக்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டன.

சென்ற ஆண்டில் கௌரவ கலாநிதிப் பட்டம் மற்றும் உயர் கல்வி பெற்றவர்களிற்கான கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. அருட்பணி. ஜொசேப் ஜெயசீலன், அருட்பணி. பி. ராஜன் றொகான், அருட்பணி. எஸ். ஐ. ஆனந்தராஜன் மற்றும் கலாநிதி. தர்சன் அம்பலவாணர் ஆகியோர் கௌரவ கலாநிதிப் பட்டம் பெற்றவர்களாகவும் அருட்பணி. எம். ஜெயானந்தராஜா, அருட்பணி. எம். நேசன் கெனடி ஆகிய இருவரும் முதுகலைமாணி பட்டம் பெற்றவர்களாகவும் அறிவிக்கப்பட்டு இவர்களில் பேரவைக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். பின்னர் கூட்டமானது திருச்சபைத் தலைவரின் ஜெபத்துடனும் ஆசீர்வாத்ததுடனும் மாலை 6.15 மணியளவில் முடிவுற்றது.

## வாலிபர்களுக்கான..

(01ஆம் பக்க தொடர்ச்சி)

சூழலில் இருக்கிற சவால்களையும் அதனைக் கையாளுதல் மற்றும் நடைமுறைபடுத்துவதற்கான வழிமுறைகளைத் தேடுவதற்கும் அங்கு சமூகமளித்தோர் அனைவரையும் உற்சாகப்படுத்திப்



பயனுள்ள கருத்துகளாக மாற்றினார்.மேலும் இதுபோன்ற வளம் மிக்க நிகழ்வுகளை ஒழுங்கமைத்த பணிக்குழுவினருக்கு உதயதாரகையின் நன்றிகள்.

## இறைபணியில்..

(01ஆம் பக்க தொடர்ச்சி)

திருச்சபையின் புதிய அருட்பணியாளர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள்.

சகோதரன். சி. அற்புதஜீவன் சாவகச்சேரி



சி.எ.சி.எம் திருச்சபையைச் சேர்ந்தவர். திரு சிவராஜா திருமதி. அற்புதராணி சிவராசா ஆகியோரின் மகனான இவர் கைதடி நுணாவிலை பிறப்பிடமாகக் கொண்டவர். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கல்வி பயின்றார்.

சகோதரன். யோ. டொரின்டன் உடப்புசலாவ



சி.எ.சி.எம் திருச்சபையைச் சேர்ந்தவர். திரு. யோகலிங்கம் திருமதி. மகேஸ்வரி யோகலிங்கம் ஆகியோரின் மகனான இவர் நுவரேலியாவினை தமது சொந்த இடமாக கொண்டவர். ராகலை உயர்தரப் பாடசாலையில் கல்வி பயின்றார்.

சகோதரன். ச. எரோன் உடப்புசலாவ



சி.எ.சி.எம் திருச்சபையைச் சேர்ந்தவர். திரு. சந்திரமோகன் திருமதி. மங்கயற்கரசி சந்திரமோகன் ஆகியோரின் மகனான இவர் உடப்புசலாவினை தமது சொந்த இடமாக கொண்டவர். ராகலை உயர்தரப் பாடசாலையில் கல்வி பயின்றார்.

நான்கு வருட இறையியல் கற்கையை நிறைவு செய்து பணிக்களத்திக்குள் செல்லும் இப் புதிய அருட்பணியாளர்களுக்கு உதயதாரகையின் வாழ்த்துக்கள்.

## கவிக்களம்...

(08ஆம் பக்க தொடர்ச்சி)

"அலகை மீட்கவே
ஆண்டவன் மாண்டனன்"
அதிர செய்தது அன்னை மரியையும்
அவர் அன்புக் குழந்தைகள் எமையும்

சிலுவை காட்சி – அது
பாவத்தையும் கரைத்து
பாவியையும் பாதை திரும்பிட செய்கிறது.

அன்னை மரியாளின் கண்ணீர்
கண்ணீர் துடைக்கும் இயக்கமாக
சிலுவையோ பொல்லா உலகை
சீர் செய்யும் அருமருந்தன்ன பொக்கிஷமாக
எமக்கான வழிகாட்டியாய்
எமைத் தூய்மை அடைய செய்கிறது

இயேசு சிலுவையில் தொங்கியது
நாம் சிலுவையைத் தொங்க விடுவதற்கல்ல
சிலுவையில் தங்கி விடுவதற்கே

ஆக்கம்: T. பிரியங்கா
நகர்பணி திருச்சபை.

## குயவன் கையில்...

(01ஆம் பக்க தொடர்ச்சி)

சமூகமளித்தமையைத் தாண்டி அனைத்து வாலிபர்களும் தங்கள் வாழ்வில் ஆண்டவர் வழியாக உடன்படிக்கைக்குரியவர்களாக மாறினர். பெலப்படுத்தி நடாத்தக் கிருபை கொடுத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை வாலிபர் இணைப்பாளர் அருட்பணி. எம். ஜெயானந்தராஜா அவர்கள் நன்றிகள் கூறி ஓர் முழுமையான ஆன்மீக பாசறையாக நிறைவு செய்தார். இந்



இறுதியாக பிராந்தியங்களிலிருந்து கலந்து கொண்ட அனைத்து வாலிபர்களுக்கும் பெரியநீலாவணைத் திருச்சபை குடும்பத்தினருக்கும், நிகழ்வை சிறப்புற நடத்தி முடித்தமைக்காக ஏற்பாட்டுக் குழுவினருக்கு உதயதாரகையின் பாராட்டுக்கள்.

## சேவைத் திருப்பணி...

(05ஆம் பக்க தொடர்ச்சி)

உள்ளடங்கலாக 39 பேர் கலந்து கொண்டனர்,

அத்துடன் அன்றைய தினத்தில், திருச்சபையின் தலைவர், திருச்சபையின் உப தலைவர், சேவைத்திருப்பணி மன்ற இயக்குநர் மற்றும் சேவைத்திருப்பணி மன்ற நிலைய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் (இணைப்பாளர்) ஆகியோர் வாலிபர் தலைமைத்துவ பயிற்சி நெறிகளின் இயக்குநர் கலாநிதி தர்சன் அம்பலவாணர் அவர்களுடன் மரியாதையின் நிமித்தம் சந்தித்து பலதரப்பட்ட விடயங்களும் கலந்துரையாடப்பட்ட விஷேடமாக சேவைத் திருப்பணி மன்றம் தொடர்பாகவும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மேலதிகமாக 15.06.2025 மற்றும் 16.06.2025 ஆகிய தினங்களில் ஊறணி ஆண்கள் இல்லம் மற்றும் பெரியநீலவணை பெண்கள் இல்லம் ஆகியவற்றையும், ஓமடியாமடு, கிரிமிச்சை, மருதங்கேணிக்குளம், கதிரவெளி ஆகிய முன்பள்ளிகளுக்குமான களப்பயணங்கள் இடம்பெற்று ஆசிரியர்கள் பெற்றோருடனான கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.

அத்துடன் சேவைத்திருப்பணி மன்றின் வன்னிப்பிராந்திய முன்பள்ளி முகாமையாளர்கள், ஆசிரியர்கள், பிராந்திய உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் சேவைத்திருப்பணி மன்றின் இயக்குநர் திரு.பிரவின் ஜோசேப் அவர்களின் தலைமையில் 17.05.2025 சனிக்கிழமை காலை 10:20 மணிக்கு வவுனியா புனித பேதுரு ஆலய மண்டபத்தில் அருட்பணி. பி. கலாவதி போதகரம்மாவின் ஜெபத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து வன்னிப்பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. எஸ். ஜோன் செல்வம் அவர்கள் கூட்டம் தொடர்பான விளக்கத்தையும் சேவைத்திருப்பணி மன்ற பணிப்பாளர் திரு. பிரிவீன் ஜோசேப் அவர்களையும் சேவைத்திருப்பணி மன்றின் நிலைய இணைப்பு உத்தியோகத்தர் (இணைப்பாளர்) திரு. த. யூதராஜா அவர்களையும் அறிமுகம் செய்து தலைமையுரையினை வழங்கியதுடன் வருகைகந்த அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்றார்.

அடுத்து திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் போதகர் அவர்கள் காலைத் தியானத்தில் வழிநடாத்தினார், இத்தியானத்திற்கு ஆதாரமாக விடுதலைப்பயணம் 18ம் அதிகாரத்தில் கூறப்படுகின்ற மோசேயின் பொறுப்புக்கள் பகிர்ந்தளித்த நிகழ்ச்சியை மையப்பொருளாக்கி நகர்த்திச் சென்றார்.

தியானம் நிறைவடைந்ததும் தொடந்தும் பாலர் பாடசாலைகள் சுயமாக நிலைத்திருக்க வேண்டியதன் அவசியம் அல்லது எப்படி நிலைத்திருத்தல் தொடர்பான கருத்தமர்வினை தலைவர் அவர்கள் தலைமை தாங்கி வழிநடாத்தினார். முகாமையாளர்கள் ஆசிரியர்கள் உற்சாகத்துடன் இச்செயலமர்வில் பங்கேற்றனர்.

தொடர்ந்து சேவைத் திருப்பணி மன்றின் இயக்குநர் திரு. பிரிவீன் ஜோசெப் அவர்கள் சேவைத் திருப்பணி மன்றின் கட்டமைப்பு தொடர்பான கலந்துரையாடலினை முன்னெடுத்தார், அத்துடன் முன்பள்ளிகளில் ஆசிரியர்கள் முகாமையாளர்கள் செய்யக் கூடிய செயற்பாடுகள் செய்யக்கூடாத செயற்பாடுகள் எவை என்பது தொடர்பான Case Study ஒன்றினை சிறப்பாக நடாத்தினார். அனைவரும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

தொடர்ந்து சேவைத்திருப்பணி மன்றின் நிலைய இணைப்பு உத்தியோகத்தர் (இணைப்பாளர்) திரு. த. யூதராஜா அவர்கள் முன்பள்ளிகளின் செயற்பாடுகள் குறித்து



கலந்துரையாடியதுடன் எமது முன்பள்ளிகளை நாங்களே நடாத்துவதற்கு உள்ளூர் வளங்கள் மற்றும் பெற்றோர் பங்களிப்பு ஆகியவற்றை முழுமையாகவும் சீராகவும் பெற்று முன்பள்ளிகளை சிறப்பாக நடாத்துவதற்கான முன்னெடுப்புக்களுக்காக நாம் அனைவரும் உழைக்கவேண்டும் என்ற அழைப்பையும் விடுத்தார்.

இக்கூட்டத்திற்கு ஆசிரியர்கள், முகாமையாளர்கள், பிராந்திய குரு, சேவைத் திருப்பணி மன்ற இணைப்பாளர், சேவைத்திருப்பணி மன்ற இயக்குநர், திருச்சயின் தலைவர் உள்ளடங்கலாக 43 பேர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பியத்தக்கது.

# சமயக் காழ்ப் புணர்வும்...

(06ஆம் பக்க தொடர்ச்சி)

தனித்துவத்தை பேணுகின்ற வேளை மறுபுறம் பல்சமயச் சூழலின் தாக்கத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டுமென ஸ்ரீபன் நீல் குறிப்பிடுகின்றார்.

### *03. வேண்டாம் திருச்சபை மையப் பணி*

ஆண்டவர் இயேசு இறையரசு மையப் பணியையே இவ்வுலகில் ஆற்றினார். (மாற்கு 1:14-15). ஆனால் வரலாற்றில் திருச்சபை இறையரசு மையத்தை புறக்கணித்து திருச்சபை மையத்துக்குள் சரண் புகுந்துள்ளது. 1938ம் ஆண்டு இந்தியாவில் உள்ள தாம்பரத்தில் நடைபெற்ற சர்வதேச தூதுப் பணி மன்ற மநாட்டில் கென்றி கிறீமர் என்ற அறிஞர் கிறிஸ்தவம் இல்லாத உலகத்தில் கிறிஸ்துவை அறிவிப்போம் என்ற திருச்சபை மைய பணியை பாராட்டுகின்றார். ஆரம்ப காலத்தில் திருச்சபை மையத்தில் அடிப்படையாகக் கொண்ட பணியே இடம்பெற்றது. தூதுப்பணி திருச்சபைக்கு சொந்தமானது எனக் கருதி திருச்சபையே தூதுப்பணியாளர்களை பல பகுதிகளுக்கு அனுப்பி வந்தனர். குறிப்பாக ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, போன்ற நாடுகளில் இலக்கு வைத்து கல்வி, சுகாதாரம், மருத்துவம், சமூக சேவை, போன்ற உபகரணங்களை மதமாற்றும் கருவிகளாக பயன்படுத்தியது. சிமோல் என்ற வரலாற்று ஆசிரியர் "இலங்கையில் பாடசாலைகளை மையப்படுத்திய மதமாற்றும் பணிகள் ஆங்கிலேயர் காலத்தில் அதிகமாக இடம் பெறுகின்றன என குறிப்பிடுகின்றார். இதன் மூலம் இயேசுவின் வரலாற்றுத் தன்மை புறக்கணிக்கப்பட்டு விசுவாசத் தன்மை வலியுறுத்தப்படுகின்றது. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட அதாவது மேலைத்தேயர் வருவதற்கு முன்பதாக நிலவிய கிறிஸ்தவம் அரசியல் பலமற்ற கிறிஸ்தவமாகும். இது இறையரசை மையப்படுத்திய பணியை ஆற்றிவந்தது. இங்கு எண்ணிக்கை சார்ந்த வளர்ச்சியல்ல, மாறாக தகமை சார்ந்த வளர்ச்சியே கருத்தில் கொள்ளப்பட்டது. இத்தகைய தன்மையுள்ள கிறிஸ்தவ அனுகுமுறை இன்றைய பல்சமய சூழலுக்கு ஏற்றாகும் ஏனெனில் இதுவே சமய ஒற்றுமைக்கான அடித்தளமாகும்.

### *04. மாற்றுக் கலாசாரத்தை ஏற்படுத்துதல்:*

நடைமுறையில் இருக்கும் கலாச்சாரத்திற்கு எதிரான கலாசாரத்தையே மாற்றுக் கலாசாரம் என அழைக்கின்றோம். நாம் நடைமுறையில் இருக்கும் நற்செய்தி அறிவிப்பு அனுகுமுறைக்கு எதிராக மாற்றுக் கலாசாரத்தை உருவாக்க வேண்டும். குறிப்பாக இன்று நாம் நற்செய்தி அறிவிக்கின்ற போது நாளைக்கும் நற்செய்தியை அறிவிக்க கூடிய முறையில் எமது அனுகு முறைகள் காணப்படல் அவசியமாகின்றது. உதாரணமாக 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித பிரான்சிஸ் ஒருமுறை தமது சீடர்களை நோக்கி நற்செய்தியை அறிவிக்க வாருங்கள் என அழைத்தார். சீடர்களுடன் அவர் புறப்பட்டுச் சென்ற வேளையில் வீதியில் தொழுநோயாளர்களை சந்தித்தார். அப்பொழுது அவர் தனது உணவுப்பண்டங்களை தொழுநோயாளர்களுடன் உண்டு மகிழ்ந்தார். பின்னர் அவர் தொடர்ந்து பிரயாணப்பட்ட வேளையில் பிச்சைக்காரர்களை சந்தித்தார் அப்பொழுது அவர் அவர்களுடன் தன்னை பகிர்ந்து கொண்டார். இவைகள் நிறைவடைந்த பின் தமது சீடர்களை நோக்கி வாருங்கள் வீட்டுக்குச் செல்வோம் என அழைத்தார். அப்பொழுது சீடர்கள் அவரை நோக்கி ஐயா நற்செய்தியை அறிவிக்க எங்களை அழைத்தீர் அல்லவா, நாங்கள் நற்செய்தியை அறிவிக்கவில்லையே என கேட்டனர். அப்பொழுது பிரான்சிஸ் நான் தொழுநோயாளர்களுடனும், பிச்சைக்காரருடனும் என்னை பகிர்ந்து கொண்ட வேளையில் நீங்கள் எங்கே இருந்தீர்கள் என வினாவினார். மேலும் அவர் அவர்களை நோக்கி நற்செய்தியை அறிவித்துக் கொண்டேயிருங்கள் தேவை ஏற்பட்டால் வார்த்தையை பயன்படுத்துங்கள் என பதிலளித்தார்.

கி.பி 1096ம் ஆண்டு சிலுவை யுத்தம் இஸ்லாமியருக்கும், கிறிஸ்தவருக்கும் ஏற்பட்டது. இச் சூழ்நிலையில் இரு இனத்தவரும் ஒருவரை ஒருவர் எதிராளியாக கருதிய வேளையில் புனித பிரான்சிஸ் இஸ்லாமிய பள்ளிவாசலுக்குச் சென்று மௌலவி சுல்தான் என்பவருடன் சமய உரையாடலில் ஈடுபட்டிருந்தார். இந்நிகழ்வு அக்கால கலாசாராத்திற்கு எதிரான மாற்றுக் கலாசாரமாகும். இப்பேற்பட்ட பணி மாதிரிகளைக் கொண்ட புதிய மாற்று கலாசாரங்கள் பல்சமய சூழலில் உருவாக்கப்படுதல் அவசியமாகும்.

### *05. கிறிஸ்துவை மறுதலிக்கும் மாதிரி:*

பல்சமய சூழலில் கிறிஸ்துவை மறுதலிக்கும் மாதிரி அவசியமாகின்றது. இது சூழல் சார்ந்த நற்செய்திப் அறிவிக்கும் மாதிரியாகும். கிறிஸ்துவுக்கு பின் 900 ஆண்டளவில் அலப்பேன் என்ற தூதுப்பணியாளர் சீனாவுக்குச் சென்றிருந்தார். சீன மக்களின் நம்பிக்கையின் படி குரு என அழைக்கப்படுபவர் இளவயதில் மரிக்கமாட்டார். இதன்படி அவர் இயேசுவின் மரணத்தைப் பற்றியோ, உயிர்த்தெழுதல் பற்றியே சீனாவில் போதிக்கவில்லை. மாறாக இயேசுவின் போதனைகளைப் பற்றியே மக்களுக்கு போதித்தார். எனவே சீனாவில் தோன்றிய கிறிஸ்தவம் இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் போன்ற பகுதிகளை ஏற்றுக் கொள்ளாத கிறிஸ்தவமாகும். எனவே இன்றைய பல்சமய சூழலில் நாம் இயேசுவை தனி நபர் சார்ந்தவராக அல்லாமல் அவரது போதனைகளை மையப்படுத்தி பகுதிகளையே முன்வைக்க அழைக்கப்படுகின்றோம். இவ்வனுகுமுறை சமய ஒற்றுமைக்கு ஓர் அடித்தளமாக காணப்படுகின்றது.

இன்றைய சமய காழ்ப்புணர்வின் மத்தியில் எமது தூதுப்பணி பல இலக்குகளை கொண்டதாகவும், இறையரசு மையப்பணியாகவும், வரலாற்று இயேசுவின் வாய்மைத் தன்மையை பாதுகாப்பதாகவும், பிற சமயங்களில் இருந்து கற்றுக் கொள்ளும் மாதிரியை உடையதாகவும், மாற்றுக் கலாசாரத்தை ஏற்படுத்தும் தன்மை கொண்டதாகவும் அவை அமையுமானால் சமயங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இவ்வாறாக நாம் செய்வதனூடாக சமய காழ்ப்புணர்வை குறைத்துக் கொள்ளலாம்.

# திருமறையின் வரலாற்றில் இடம் பிடித்த பெண்கள்

சிபில் தேவகி ஞானபிரகாசம்




## குணசாலியான பெண் (Good Woman)

"திறமை வாய்ந்த மனத்திடம் உள்ள மனையாளைக் காண்பது மிகமிக அரிது. **இவள் பவளத்தை விடப் பெருமதிப்புள்ளவள்.** குணசாலியான பெண்ணைக் கண்டு பிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது" என்று நீதிமொழிகள் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அநேகமாக நடைபெறுகின்ற அனைத்துத் திருமண வைபவங்களிலும் குணசாலியான பெண்ணைக் குறித்துப் பேசுவார்கள். குணசாலியாக விளங்குகின்ற ஒரு பெண் மிகவும் சிறந்தவள் என்பதற்குப் பொதுவாக நீதிமொழிகள் 31:10 பகுதியிலிருந்து ஆலோசனை கூறுவார்கள். ஆனாலும் குணசாலியான ஒரு பெண்ணை மனைவியாகக் கண்டுகொள்ளுவது அரிதான ஒரு காரியமாகவே காணப்படுகின்றது. எழுநூறு மனைவிகளையும் முந்நூறு மறுமனையாட்டிகளையும் கொண்ட சாலோமோன் **"ஆயிரம் பேருக்குள்ளே ஒரு புருஷனைக் கண்டேன், இவர்கள் எல்லாருக்குள்ளும் நான் ஒரு பெண்ணையும் காணவில்லை"** என்று கூறியிருக்கின்றார். (பிரசங்கி 07:28)

குணசாலியான பெண்கள் தாய்மார்களாக இல்லங்களிலிருந்து இலை மறை காயாகச் சேவைகளைச் செய்து வருபவர்கள். உலகத்திலே முக்கியமானதும் அடித்தளமுமாக விளங்கும் குடும்பங்களைத் தங்களுடைய அன்பினாலும் தியாகத்தினாலும் கட்டி எழுப்புபவர்களே குணசாலியான பெண்கள். அதாவது குணசாலியான பெண்கள் வீட்டைக் கட்டுகிறவர்களாகவும், வீட்டைக் கண்காணிக்கிறவர்களுமாக இருக்கிறார்கள். குணசாலியான ஒரு பெண் அதிகாலையிலே இருட்டோடே துயிலெழுந்து தன்னுடைய வீட்டாருக்கு ஆகாரம் கொடுக்கிறாள். "பிந்திப் படுத்து முந்தி எழு" என்று தமிழ் வழக்கில் நிலவிவரும் பழமொழியானது ஒரு நல்ல குணசாலியான பெண்ணுக்கு மிகவும் பொருத்தமானதாகும். "வேலைக்காரி பார்த்துக்கொள்ளட்டும்" என்று இவள் சோம்பலாக இருக்கமாட்டாள். இவள் வீட்டில் உள்ள ஒவ்வொருவரைக் குறித்தும் அக்கறையுள்ளவள். வீட்டாருடைய பாதுகாப்பிலும் இவள் மிகுந்த கரிசனை உள்ளவள். குணசாலியான ஒரு பெண் எப்போதும் தான் சார்ந்த குடும்ப உறவுகளைக் கடவுளுக்குள் கொண்டு வருகின்ற ஒரு பெரும் பணியினையும் செய்து வருகின்றாள்.

இவள் வீட்டில் உள்ள ஒவ்வொரு விடயங்களையும் அலட்சியமாக எண்ணாமல், கருத்தோடும் அக்கறையோடும் செய்து வருகின்றாள். குணசாலியான ஒரு பெண் தன் குடும்பத்தை நல்வழிப்படுத்துகின்றாள். தயையுள்ள போதகம் அவளுடைய நாவின் மேலிருக்கிறது என்று நீதிமொழிகள் 31:26 இல் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அவள் வீண்விடயங்களை அலப்புவதில்லை. புறங்கூறுகின்ற நாவு அவளுக்கில்லை. தான் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை அவள் தன் குடும்பத்தவர்களோடும் தேவையில் உள்ளவர்களோடும் பகிர்ந்து கொள்ளுகின்றாள். ஒரு ஆண் மகனுக்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு வெற்றிகளின் பின்னால் ஒரு பெண் இருக்கின்றாள் என்பது உலகம் ஏற்றுக்கொள்ளுகின்ற உண்மை மாத்திரம் அல்ல உலக வரலாறும் அதையே கூறுகின்றது. இவ்வாறு செயற்படுகின்ற ஒரு பெண்ணைக் **"குணசாலியான பெண்"** எனவும் அவள் **"பாக்கியவதி"** எனவும் திருமறை கூறுகின்றது. இவ்வாறான பெண்கள் எப்போதும் இறையரசின் பணிகளிலே மேலான பங்களிப்புக்களைச் செய்கின்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

திருமறை ஆதாரங்கள் : நீதிமொழிகள் 31:10-31 - நல்ல மனையாள்

இப்பத்திரிகையானது ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள றூபன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு,
27.06.2025 திகதி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையினாரால் வெளியிடப்பட்டது.